# ரோஜா




மலர்.2 இதழ்.1

மே 1994

$1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TV La Publications Printings

(416) 425-2884

## ரீவிலா பப்ளிகேஷன்ஸ் & பிரின்டிங்

சஞ்சிகைகள்
விளம்பரப்
பிரசுரங்கள்
விழா மலர்கள்
திருமண
அழைப்பிதழ்கள்
நினைவு மலர்கள்

Business Cards
Letter Heads
Envelopes
Coupons
Invoices
Flyers
Price Lists

உங்களுக்குத் தேவையான
தமிழ், ஆங்கில அச்சமைப்புத் தேவைகளை
அழகான முறையில் நிறைவேற்றிக்கொள்ளவும்,

உங்களுக்குத் தேவையான
சகல அச்சுவேலைகளை தரமாகவும், மலிவாகவும்
செய்து கொள்வதற்கும் எம்மை நாடுங்கள்

ரீவிலா பப்ளிகேஷன்ஸ் & பிரின்டிங்
Tel: (416) 425-2884
Fax: (416) 425-2462
F.P.P.O., P.O.Box 45593, 747 Don Mills Road.
Don Mills, Ontario, M3C 3S4. Canada.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கிய மாத மலர்

# ரோஜா

மலர். 2 இதழ். 1

ஆசிரியர்.
**ரி.வி.எல். ஆனந்த்.**

வடிவமைப்பு/அச்சமைப்பு/பிரசுரம்/
விளம்பரம்/அச்சுவேலை.
**ரிவிலா பப்ளிக்கேஷன்ஸ்**

அட்டை வடிவமைப்பு.
**ரிவிலா பப்ளிக்கேஷன்ஸ்**
**கரன் கிராப்**

விநியோகம்.
**ஜெயந்தன்**

ஓவியம்.
**சுகந்தி** - டொன்மில்ஸ்
**ஆனந்த்**
**ரூபி**

**Articles/Advertisements**
TEL: (416) 425 2884
FAX: (416) 425 2462

**Address:-**

"ROJAH"
F.P.P.O., P.O.BOX 45593,
747 DON MILLS RD,
DON MILLS,
ONT. M3C 3S4, CANADA.



மலர்ந்த ரோஜா..... - பேசும்
ஆசிரியரின் பேனா!.......

## இப்படித்தான் என்றில்லாது இப்படியும் என்று எண்ணப் பழகிக்கொள்வோமே!

நம்மவரிடையே ஒரு பழக்கம் (வழக்கம்) ஒருவர் வித்தியாசமாக அல்லது புதுமையாக ஒன்றைச் செய்தால் அதை ஆதரிக்கத் தவறிவிடுகின்றோம். அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து, அவர்களின் எண்ணங்களை செயற்படுத்தி முன்னேற்றுவதென்பது மருந்திற்குக் கூட இல்லை. அப்படியிருக்காமல், அவர்களுடைய புதிய எண்ணங்களை மழுங்கடிக்கச் செய்து விடுகின்றோம். எமது பழைமையான கலாச்சாரத்தை எப்படி பேணிப் பாதுகாக்கவேண்டும் என்று எண்ணுகின்றோமோ அதே போல் ஒருவரின் புதிய நல்ல சிந்தனை வித்துக்கள் முளைத்து அவை வளர்வதற்கும் நாம் பாடுபடவேண்டும்.

நல்ல விசயங்களை ஒருவர் செய்யும் போது அதனை ஆதரித்து அங்கிகரிக்கவேண்டும். இதனாலேயே எமது சமுதாயத்தை முற்போக்கான பாதையில் செல்ல வழிவகுக்கலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடம் உயிர்பெறட்டும்!

- நிலா. குகதாசன் -

சித்தரை வந்தது!
சித்திரை வந்தது!
சிந்திடும் கண்ணீர் மாறிடுமா?...
நித்தமும் தீயினில்
செத்து மடிந்திடும்
நெஞ்சினில் காயங்கள் ஆறிடுமா?...

★★★

பஞ்சமும் நோய்களும்
பட்டினிப் பேய்களும்
எஞ்சிய உயிர்களை ருசிக்கிறதே!
எங்களின் மண்ணிலே
இனவெறி அரக்கனோ
இளசையும், முதிசையும் புசிக்கிறதே!

★★★

எத்தனை சித்திரை
இத்தரை கண்டது
ஏழ்மைகள், இழிவுகள் ஓடினவோ?...
புத்தரின் போதனை
எத்தரின் கைகளில்
போலிகள் மணிமுடி சூடினவோ?...

★★★

சொந்தம் அழிந்தது!
சுற்றம் அழிந்தது!
சோகங்கள் எங்களின் உறவுகளே!
எங்கள் தமிழினம்
இதுவரை கண்டது
இழப்புகள், உயிர்பலி, துயரங்களே!

★★★

நேற்றைய நிகழ்வுகள்
இன்றைய அழிவுகள்
நாளைய விடிவுக்கு அனுபவங்கள்!
போனது போகட்டும்!
புத்தொளி வீசட்டும்!
பூமியில் மானிடம் உயிர்பெறட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலோங்கும் தமிழர்கள்

வெளிநாட்டவரின் கண்களிலிருந்து தப்பமுடியாதவாறு வானத்தைக் கிழித்துக்கொண்டு உயர்ந்து கம்பீரமாகக் காட்சி தருபவைதொடர்மாடி மனைகள். அனுபவமில்லாதவர்கள் எதனையும் சாதிக்கமுடியாது என்று பொய் சொன்னவன் மீது "வக்கீல் நோட்டீஸ்" அனுப்பவேண்டும் என்று சொல்ல வைக்கும் வகையில் தமது திறமையை மூலதனமாக்கிச் சேவையால் புகழ் பூத்து இத்தகைய தொடர் மாடி மனைகளின் நிர்வாக அதிகாரியாகப் பணிபுரிபவர் திரு. செல்லையா இறஞ்சிதன்.

வாழ்வில் மேலோங்கும் தமிழரான அவரது அனுபவங்களை இங்கு பகிர்கின்றார்.



திரு.செல்லையா இறஞ்சிதன்

புகழ் வாங்கும் வரை எனக்கு அது சாவி கொடுத்துக் கொண்டிருந்தது. வாங்கிய பின் அதுவே எனக்கு சக்திகொடுக்க ஆரம்பித்தது. என் உறுப்புக்களைப் போலவே என் பொறுப்புக்களையும் மதிக்கிறேன். என்னைச் சுற்றியிருக்கும் எல்லா மனிதர்களையும் பார்க்கிறேன். வயது வேறுபாடின்றி அவர்கள் எழுத்திலே தர முடியாதளவிற்கு அனுபவங்களைத் தருகிறேன். இந்த மாடிமனையின் நிர்வாகத்தில் நான் எதையுமே யோசிக்காமல் முடிவு எடுப்பதுமில்லை, முடிவு எடுத்தபின் யோசிப்பதுமில்லை. பிரச்சனைகள் தோன்றும் பொழுது சிலதைக்கண்டு சிரிக்கிறேன், சிலதை எரிப்பதைத் தவிர வேறு வழியில்லை. அதனால் அந்தப் பிரச்சனைகள் இங்கு வாழும் சமுதாயத்தை தாக்காதவாறு காக்கமுடிகின்றது.

தமிழீழத்தின் சாவகச்சேரி எனது பிறந்த ஊர். எனக்கு ஐந்து சகோதரர்களும், மூன்று சகோதரிகளும் உளர். எனது தந்தையார் சாவகச்சேரி இந்துவில் தலைமை ஆசிரியராக பணி புரிந்தவர். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் எனது உயர்கல்வியை முடித்த பின்னர், சிறிது காலம் தொலைத்தொடர்பு திணைக்களகத்தில் தொலைத்தொடர்பு பரிசோதகராக பணி புரிந்தேன். தவிர்க்கமுடியாத காரணத்தால் 1986இல் நாட்டைவிட்டு வெளிநாடு செல்ல வேண்டியதாயிற்று. முதலில் டென்மார்க் சென்று சில மாதங்களின் பின்னர் கனடா வந்து சேர்ந்தேன். முதலில் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்தேன். அது Circuit செய்யுமிடம். அந்தத்

தயாரிப்பு: ★ ஜெகதீஸ்வர் ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சாலை வேறு இடத்திற்கு நகர்ந்த தால் அத்தொழிலில் நீடிக்கமுடியவில்லை. பின்னர் முயற்சியின் பயனால் I.B.M இல் ஒரு கென்றக்ட் தொழிலாக கம்பியூட்டர் Memory boardsஐ பரிசோதித்து அவற்றைத் திருத்தும் வேலை கிடைத்தது. அதன்பின் னர் கம்பியூட்டர் என்ஜினியரிங் டிப்ளோமா படிக்கும் நோக்குடன் SENECA கல்லூரி யில் கல்வி பயின்று கொண்டிருக்கும் பொழுது பகுதி நேரமாக இந்த வேலை யில் ஈடுபட்டு, இப்பொழுது முழுநேரமாக இயங்குகிறேன்.

இது ஒரு விருப்பமான தொழில் என்று சொல்ல முடியாது. சில சமயங்களில் மனசு மிகவும் சுருங்கிப் போகின்றது. ஆனால் இன்னுமொரு பக்கத்தில் பார்க் கும் பொழுது இதன் ஒலி எனது இதய ஒலியாகின்றது. ஒரு நிறைவைத் தருகின் றது. சமூக சேவை ஆற்ற முடிகின்றது. பிறருக்கு உதவி செய்யக்கூடியதாக இருக்கின்றது. அந்த வகையில் இதயம் மிகவும் விசாலமாகின்றது.

இந்த வேலையால் எனது சுதந்திரம் பெரு மளவில் கட்டுப்படுத்தப்படுகின்றது, பாதிப்ப டைகின்றது. எந்த நேரமும் வேலைதான். அதாவது 24 மணிநேரமும் கடமைதான். டாக்டர்மார் போல, பொலிஸ்காரர் போல வீட்டிலிருக்கும் பொழுதும் அல்லது வேறு அலுவலாக எங்கு சென்றபோதும் எனது கவனம் இந்தக் கட்டிடத்தில் இருந்தே ஆகவேண்டும். அவசர அழைப்புகளுக்கு முகம் கொடுத்தே தீரவேண்டும். இந்தக் கட்டிடத்தில் சுமார் 325க்கும் மேலான குடும்பங்கள் இருக்கிறார்கள். பெரும்பா ண்மை தமிழ் மக்களும் சீனர், வெள்ளை யர், கறுப்பு இனத்தவர் சிறிய அளவிலும் இருக்கிறார்கள். சகலருமே ஒரு சிறு தேவைக்குக் கூட என்னைத்தான் முத லில் அணுகுவார்கள். அவசரம் ஆபத்து என்றால் கூட 911 க்குப் போன் செய்யு முன்பாக என்னை நாடுபவர்களும் இருக் கிறார்கள். மொழிப் பிரச்சனையால் உரிய இடங்களுக்குத் தொடர்புகொள்ள முடி யாது தவிப்பவர்களுக்கும் எனது உதவி பெரிதும் தேவைப்படுகிறது. பலரது பிரத்தி யேகப் பிரச்சனைகள் கூட அலசி ஆராய் ந்து தீர்க்கமுடிகின்றது. பலரது பண நெரு க்கடிகள் கூட எனது மறைமுக உதவிக ளால் நிவாரணம் பெறுகின்றன.

எங்களது சமுதாயம் பிரச்சனைகளை விரும்பாத சமுதாயம். அதனால் அவர் களது நலன்கருதி இக்கட்டிடம் பூராகவும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் ஸ்திரப்படுத்தி வருகின்றோம். விரைவில் கமராக்கள் சகல இடங்களிலும் பொருத்த ப்பட்டு அந்நியரின் அநாவசிய நடமாட்டம் முற்றாக ஒழிப்பதற்கான திட்டங்களை நடை முறைப்படுத்தி வருகின்றோம்.

இக்கட்டிடத்தில் உள் விளையாட்டரங்கை நிர்மாணிப்பதிலும், தமிழ் வாசிக சாலை ஒன்றை உருவாக்குவதிலும் தற்போது அதிக கவனம் செலுத்துகிறோம். அத்து டன் கல்யாண வீடுகள், பிறந்த தினக் கொண்டாட்டங்கள் போன்றவற்றை நடத் தக்கூடிய மண்டபவசதிகளை அமைப்பதி லும் அக்கறை எடுக்கின்றோம். மற்றும் முதியவர்கள் ஒன்றுகூடிக் கதைப்பதற்கும், அவர்களது பொழுதை இனிமையாகக் கழிப்பதற்கும் ஏற்ற வகையில் இடவசதிக ளைச் செய்து கொடுப்பதிலும், அங்கு டெலிவிஷன், வீடியோ சாதனங்களை அமைப்பதிலும் ஆர்வம் காட்டுகின்றோம். இப்படியாக விரைவில் அமுலாக்கக் கூடிய எத்தனையோ நல்ல திட்டங்கள் உண்டு. இவற்றை நன்றாக நடத்துவதற்கு இக்கட் டிடத்திலுள்ள மக்களின் ஒற்றுமை தான் மிகப் பெரிய பலமாகும்.

இலவச மின்சாரம், இலவச எரிவாயு, இல வசத் தண்ணீர், இலவச கார் நிறுத்துமிடம் என்பனவற்றுடன் தனி, இரு படுக்கையறை களுக்கான வாடகை இப்பகுதியிலுள்ள மற்றய கட்டிடங்கள் போலவே சுமாரான தாக இருக்கின்றது. இங்குள்ளவர்கள் அனேகமாக உரிய நேரத்தில் வாடகை செலுத்தி விடுவார்கள். மீறுவோர் மீது பாராபட்சமின்றி, நிர்வாகத்தின் வழிமுறை களுக்குட்பட நடவடிக்கை எடுக்க நேரிடு வதுமுண்டு.

சுமார் நான்கு ஐந்து வருடங்களுக்கு முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக இக்கட்டிடம் அமைந்துள்ள பகுதி சமூகவிரோதச் செயல்லரின் கோட்டையாகக் கணிக்கப்பட்டது, கருதப்பட்டது (எமது சமூகத்தவர்கள் எவருமே இதில் ஈடுபட்டிருக்கவில்லை. பிறிதொரு சமூகம் தான் காரணமாக இருந்தது) கடுமையான பல நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலமே இப்பகுதியிலிருந்து அவற்றை முற்றாக அழித்தொழிக்க முடிந்தது. இப்பகுதி பாராளுமன்ற உறுப்பினரும், பொலிசாரும் இதற்குப் பெரிதும் உதவியது போலவே இன்றும் பல வழிகளில் எனக்கு உதவி புரிகின்றனர். இவர்களின் உதவி எனது நிர்வாகத்தை சீராகச்செய்ய வழிவகுக்கின்றது. இவர்களைப்போலவே எனது மனைவியாரும் எனக்குப் பல வழிகளில் உதவி செய்கின்றா என்பது இங்குள்ள அனைவருக்கும் தெரிந்ததே. இக்கட்டிடத்தின் பராமரிப்புப் பகுதியில் துடிப்பான ஐந்து தமிழ் வாலிபர்கள் இயங்குகிறார்கள். இவர்களுடன் வேறு இனத்தவர்கள் சிலரும் வேலை செய்கிறார்கள். உதயகுமார், ரகு, இலங்கேசன், ராஜன், பிரேம்-குமார் ஆகிய இந்த ஐவரின் திறமையை பலர் பாராட்டுகின்றார்கள். தமிழ் வர்த்தக நிலையம் இக்கட்டிடத்திலிருந்து சிறப்பான சேவையை இப்பகுதி முழுவதற்குமான மக்களுக்கு மிகவும் மலிந்த விலையில் ஆற்றி வருகின்றது. அதன் உரிமையாளர்கள் மனோகரனும், கவிகரனும் பழகுவதற்கு மிகவும் இனிமையானவர்கள்.

தமிழர்களுக்கான சகல தேவைகளையும் பூர்த்திசெய்து பரவலாக தமிழ் மக்கள் அனைவராலும் விரும்பப்படும் ஓரிடமாக எதிர்காலத்தில் மிளிரும் என்பதில் எவ்வித மான சந்தேகமுமில்லை. இப்பகுதி ஒரு குட்டி யாழ்ப் பாணமாக உருவெடுக்கும் நாட்கள் அதிக தூரமில்லை.

"ரோஜா" மலர் கூட இந்தக் கட்டிடத்திலிருந்துதான் மொட்டுவிட்டு, இன்று இந்தக் கட்டிடத்தில் மாத்திரமல்ல, கனடாவில் மாத்திரமல்ல, ஐரோப்பிய நாடுகளில் கூட மணம் வீசிக் கொண்டிருக்கின்றது. இதற்குரிய பெருமை இந்த மலரின் ஆசிரியரைவிட இக்கட்டிடத்திற்கேயாகும். அழகிற்கும் கவர்ச்சிக்கும் "ரோஜா" புகழ் பெற்றது. மேலும் மேலும் "ரோஜா" மலரும் பொழுது கருத்தும் தரமும் கூடவே மலரவும், எமது இனத்தின் ஒற்றுமைக்காகவும், விடுதலைக்காகவும், தமிழ் மொழிக்காகவும் என்றும் மணம் வீசிக் கொண்டிருக்க இக்கட்டிடத்தின் நிர்வாக சார்பாக என் வாழ்த்துக்கள்.

பூ மட்டுமல்ல.... பூ வைத்த இடமும் மணக்கும் என்று சொல்லுவார்கள். இது உண்மைதான். ரஞ்சிதன் என்ற இந்தப் பூவால் பூ வைத்த இடமான 31-35 சென். டெனிஸ் டிரைவ் மாடிமனையும் மணம் வீசப்போவது நிஜம்!

★★★★★




- எஸ். தே -

"கல்லோ... எப்படி இருக்கிறீர்..., கண்டு கன நாளாப் போச்சு..."
"இருக்கிறம்..., எங்கையோ அவசரமா போறமாதிரி இருக்கு......."
"9 மணியாகுதில்லே.... ரேடியோ தொடங்கப்போகுது..... நீ கேட்கிறதில்லயே?...."
"கனடாவில...., எவர் தமிழ் ரேடியோவை கேட்கப் போறாங்கள்..."
"இங்க தானேடா எவ்வளவோ பத்திரிகைகள் இருக்கு..."
"இவங்களுக்கு வேறவேலையில்லை..... அண்ண..."
"தமிழ் கலை நிகழ்ச்சிக்காவது போறனியே....."
"அதுக்கெல்லாம் எங்கண்ண... நேரம்...."
"அதுசரி இப்ப நீ எங்க போறாய்....."
"லாண்டட் போம் நிரப்பப் போறன்..."
"அப்ப....... உனக்கு..... கேஸ் அக்சப்ட் பண்ணிட்டாங்களே......"
"ஓ..... சரியா வைச்சு வாங்கிப் போட்டாங்கள். கடைசியா 'தமிழன்' என்று சொன்னன் அக்சப்ட் பண்ணீட்டாங்கள்......!"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் கிட்டி அடிப்போமா?...

"ராசுக்குட்டியர்...... ராசுக்குட்டியர்.......
அமத்துங்கோ..... அமத்துங்கோ....."

"எட.... எட....... எங்கை....... எங்கை....... முருகேசு..., நானும் இந்த நாட்டுக்கு வந்த துக்கு பிறகு உதை உயிரோடை கண்ணா லையே காணேல்லை........" என்று அவதிப் பட்டார் ராசுக்குட்டியர்.

"எட..... சீ..... விட்டிட்டியளே உந்த சனியன் இனி போனா வர பெரிய சில்லெடுப்பு நான் இப்ப 8.10 மணி பஸ்சை பிடிக்கவேணும்...." என சலிப்படைந்தார் முருகேசர்.

"நீ என்னத்தைச் சொல்லுறா முருகேசு...." என புரியாமல் கேட்டார் ராசுக்குட்டியர்.

"ஏன்.. உந்த எலிவேட்டரைத்தான்..." என்றார் முருகேசர்.

"எட... நான் ஏதோ உயிர் சாவல் அல்லது பேடு கூட்டை திறந்து வெளிக்கிட்டுதாக்கும் எண்டு நினைச்சன். ஊரில..... இதைத்தனே அமத்திபிடிக்கிறது. எட..... இந்த...... செத்த விறைச்சல் கோழியை திண்டு.... திண்டு..... வாய் சப்பெண்டு கிடக்கு......., நல்ல விட-லையா உயிரோடை பிடிச்சு தலையை திருகி சூப்பு வைச்சு..... குடிச்சா........ இந்த குளிருக்கு கண...... கணப்பாக இருக்கும். ஊரிலை நீயும், நானும்... இந்தியன் ஆமிக் காறங்கள் வந்தாலும் வந்தாங்கள்........ அருமைநாயகம் அண்ணன்ரை கோழிகள் எத்தனையை பிடிச்சு விழுங்கி இருப்பம் சீ... சீ....... அந்த நாள் இனி எப்ப வரப் போகுது..." என்று தன்னையே ஒரு நிமிடம் மறந்தார் ராசுக்குட்டியர்.

"சீ... சீ...... இன்னும் இந்த எலிவேட்டிரை காணவில்லை கண்டியளே....." என சலித் துக்கொண்டார் முருகேசர்.
சின்னராசுவும், பெரியதம்பியும் வாறாங்கள். அவர்களுக்கு பின்னால் இரண்டு எமது ஊர் இளம் பெண்களும் அவசர...... அவச-ரமாக வந்துகொண்டிருந்தனர்.

இளம் பெண்களை கண்டதும் சின்னராசு பெரியதம்பியை பார்த்து... "யூ கோ வாமிற் ஐ கம்" என்றான். பெரியதம்பிக்கு சரியாக விளங்கவில்லை.... "O.K நோ பிறபளம்....." என்றான். பெரியதம்பிக்கு ஆங்கில அறிவு அவ்வளவு போதாதுதான்....., ஆனாலும்..... இளம் பெண்கள்..... அதுவும் எமது ஊர் கன்னிகளுக்கு முன்னால் தன்னை விட்டுக் கொடுப்பானோ?....

இவர்களின் சம்பாஷனையை கேட்டுக் கொண்டு இருந்த ராசுக்குட்டியர் மெதுவாக சின்னராசுவிடம் சென்று....... "சின்னராசு...... அவன் சுகமில்லாமல் இருக்கிறான்போல.... தனிய வெளியபோக சொல்லுறா சத்தி..... கித்தி....... எடுத்தா....... தலையை சுத்தி

## டொன்மில்ஸ் சிவப்பிரகாசத்தின்... ராசுக்குட்டி அப்பா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழப்போறான்" என்றார்.

"ராசுக்குட்டி அப்பு........ இது இங்கிலீசு இதிலை தலையிடாதைங்கோ, நான் என்ன சொன்னனான் தெரியுமே?......., பெரியதம்பிட்ட காரை ஸ்டாட் பண்ணி வாம் பண்ண சொன்னனான்; உங்களுக்கு இந்த பாசையள் விளங்காது....."

"எடே...... சின்னராசு நான் ஊரில ஓவசியர் வேலை பார்த்தனான்......, எனக்கும் கொஞ்சம் இந்த பாசை தெரியாமலே.... ஆனால்.... நீ....... உந்த பெட்டையளுக்கு முன்னால நாலு விசயம் தெரியும் என்று காட்டத் துடிக்கிறது விளங்குது, ஆனால் நீ..... நான் வேட்டிக்கட்டோடை நிக்கிறதை.... என்னை... இப்படி கணக்கெடுக்க கூடாது கண்டியோ..., நீ சொன்னதுக்கு 'வோம் அப் த... கார்' எண்டு சொல்லவேணும் நீ சொன்னது..... 'வோமிற்'. அது சத்தி எடுக்கிறது......; பாத்தியே இங்கிலீசு காறன் 26எழுத்தை எவ்வளவு சுத்தோ சுத்தி வைச்சிருக்கிறான்; நாங்கள் 246 எழுத்துகளை வைச்சு படுகிறபாடு..., இது எப்படியிருக்கு கண்டியே.... காரை வாம் பண்ணுறதுக்கும் சத்தி எடுக்கிறதுக்கும் என்ன சம்பந்தம் சொல்லு....."

"ஹீ...... ஹீ.......... சும்மா போங்கோ ராசுக்குட்டி அப்பு... எனக்கு தெரியாமலே சொன்னனான்.... சும்மா உந்த பெட்டையளுக்கு முன்னாலை ஒரு கில்லாடித்தனத்துக்கு சொன்னனான்......." என்று சமாளித்தவாறு "ராசுக்குட்டி அப்பு எலிவேற்றர் வந்திட்டுது...." என்றபடி இந்த கடுங்குளிருக்கையும் முகம் வேர்க்க வேர்க்க எலிவேற்றரில் கீழ் நோக்கி சென்றான் சின்னராசு.

"சரி... சரி.... முருகேசு நீ எங்கை போறா அவதி அவதியாக" என முருகேசரைப்பார்த்து கேட்டார் ராசுக்குட்டியர்
"என்ன ராசுக்குட்டியர்......... பொங்கல் சாமான் வாங்கப்போறன் தமிழ் கடையிலை....."
"நான் முந்தி நீ முந்தி எண்டு விலையலை குறைச்சு விற்கிறாங்கள்......; பொறு..... பொறு.... நானும் வாறன்....." என்றபடி ராசுக்குட்டியரும் முருகேசருடன் சேர்ந்து கொண்டார்.

"பொங்கலுக்கு எல்லாம் கிடக்கு தம்பி... பானை இருக்கோ?...." என கேட்டார் ராசுக்குட்டியர்.
"பெரியவர் அது பற்றிதான் யோசிச்சுக் கொண்டிருக்கிறன்...." என்றார் கடைக்காரர்.
"தம்பி உதையும் இஞ்சை வாயை விட்டு சொல்லாதை....... நீ யோசினையில இருக்கேக்கையே பானையளை இறக்கி விற்க தொடங்கிவிடுவாங்கள். இது கனடா!.... உனக்கு என்ன மூளைக்கு வருகுதோ அதை உடனே செய்; யோசிக்காதை எல்லாம் காசாக்கி போடலாம்......; நான் ஒண்டு சொல்லுறன் நேற்று கொஞ்சப்பேர் என்ரை வயசுக்காறர்...... அந்த காலத்திலை நாங்கள் விளையாடின இலுப்பங்கொட்டை விளையாட்டு, கிட்டி, எட்டுக்கோடு... எண்டு பார்க்கிலை கதைச் சவை. வள்ளியம்மையும் மாங்கொட்டையை தள்ளி கனநாளா போச்சு எண்டு பழைய ஞாபகத்தை தன்ரை வயசுக்காற பொம்பிளையளோட கதைச்சு கொண்டிருந்தவை........; இந்த முறை அவைக்கும் அப்பாட்மெண்ட், வீடுகளிலே பொழுதுபோக இல்லாமல் தவிக்கினை........., உந்த விளையாட்டுகளை புதுக்க அறிமுகப் படுத்தி..... விளம்பரத்திலை போட்டி எண்டா சனம் அள்ளிக் கொண்டு போகும் கண்டியே. சமர் காலத்திலை பொம்பிளையள் பார்க்கிலை மாங்கொட்டையை தள்ளி.... தள்ளியே உடற்பயிற்சி செய்ய ஒரு வாய்ப்பு. வள்ளியம்மைக்கும் டொக்டர் எத்தனை தரம் சொல்லி இருப்பார்..... எனை உடற்பயிற்சி செய் எண்டு.... மனிசி அதுகளை செய்ய வெட்கப்படுகுது.....; அது அதுகளை... அதன் அதன்... போக்கிலை விட்டுப்பிடிக்க வேணும் கண்டியோ" இவர்களின் கதையின் நடுவே கனேடிய தமிழ் இளம்பெண் அந்த கடைக்கு வரவும் ராசுக்குட்டியர் தன் பேச்சை நிறுத்தினார்.

"கலோ.... யூ நோ...... உங்கட.... யூ நோ த.... லோங்..... லோங்..... வண்...., கிறீன்.... கிறீன்..... வண்....., நடுவ..... மொழி.... மொழி...... வண்..... வெஜிட்டபிள் இருக்கா?" என கேட்கவும் கடைக்காரர் ராசுக்குட்டியரை பார்க்க ராசுக்குட்டியர் கடைக்காரரை பார்க்கவும், தொடர்ந்து அப்பெண் மணி "ஐயோ... ஐ மறந்து போச்சு..... வட் தட்... கோல்ட்.... வெஜிட்டபிள்" அப்பெண்மணியையே பார்த்துக்கொண்டிருந்த ராசுக்குட்டியர்........
"பிள்ளை நீ கனடாவிலை பிறந்தனியோ?" எனக் கேட்டார்.

"நோ.... நோ..... ஐ ஆம் ப்றம் சரசாலை BUT... YOU KNOW எனக்கு தெமில் மறந்து போச்சு....."
"அடி செருப்பாலை...... சரசாலையிலை பிறந்து முருங்கக்காயை மறந்து போனியோ....." என ராசுக்குட்டியர் கேட்டதும்...

"யெஸ்.... யெஸ்..... முக்....கங்.....கேய்....." என்று கூறிய அப்பெண்மணியை தொடர்ந்து....... ராசுக்குட்டியர்......
"எடிபிள்ளை..... முக்காதை......... இந்த முக்கு முக்கினி எண்டா நாங்கள் இஞ்சை கடையிலை நிற்கேலாது" என்றவர், கடைக்காறரை பார்த்து...
"எட தம்பி நான் வாறன்....., இதுகளை பார்த்து கொண்டு நிண்டா....... கொழுப்பு திண்டு ஏறி...... மாரடைப்பு வராது, சும்மாவே... மாரடைப்பு வந்திடும் என நடையை கட்டினார் ராசுக்குட்டியர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kumars SILK HOUSE

**Tel/Fax:**
**(416) 465-7131**

உங்களுக்குத் தேவையான கல்யாண கூறைப் புடவைகள், பணாறஸ், காஞ்சிபுரம், தர்மாவரம், மைசூர் சில்க், காஸ்மீர் சில்க், ஜப்பான் நைலக்ஸ், மற்றும் சட்டைத் துணி வகைகள்

மணப்பெண்ணுக்குத் தேவையான அலங்காரப் பொருட்கள், ஆடை அணிகலன்கள்

மணமகனுக்குத் தேவையான சர்வாணி, குருத்தா, தலைப்பாகை வகைகள்

பரதநாட்டிய நகைகள், எவர் சில்வர் பாத்திரங்கள்

ஆடைகள் துரிதமாக தைத்துக் கொடுக்கப்படும்.



**Open 7 days a week from 11.00 a.m. to 10.00 p.m.**

**1394 Gerrard Street. East, Toronto, Ont Canada**

# பொறிநுட்பம்

## PORINUDPAM

வாகனங்கள் திருத்தும் நிலையம்

- ★ Car Painting & Body Works
- ★ பெற்றோல், டீசல் வாகனங்களுக்கான சகல விதமான இயந்திர, மின்சார திருத்த வேலைகள்
- ★ வாகனங்களுக்கான அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்குதல் (Vehicle Inspected & Certified)
- ★ Computer வசதியுடனான திருத்த வேலைகள்
- ★ இறக்குமதி செய்யப்பட்ட, உள்நாட்டு வாகனங் களின் விசேட நிபுணத்துவம்

**435 BOWES RODE, UNIT 5**
**CONCORD, ONT. L4K 4A4**
**Tel: (416) 738-8360**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Best Way Mart

2169 VICTORIA PARK AVE (Victoria park & Ellesmere)
SCARBOROUGH, ONT.
**TEL:(416) 444-8202 Fax: (416) 444-8913**

## இலங்கை இந்திய கனேடிய உணவுப் பொருட்கள்

உடன் மரக்கறி வகைகள் ★ அன்பளிப்புப் பொருட்கள்

**சகல விதமான வாழ்த்து மடல்கள்**
(மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்)

இலங்கை, இந்தியாவிலிருந்து வெளிவரும் தமிழ், சிங்கள, ஆங்கில வார மாத வெளியீடுகள்

அமெரிக்கா, கனடா, இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் வார மாத சஞ்சிகைகள்

சகல விதமான சுவர் கடிகாரங்கள் ★ தொலை பேசிகள் ★ KEY CENTRE
உங்களது வாகன, வீட்டுத் திறப்புக்கள் வெட்டிக் கொடுக்கப்படும்

LOTTO 6 49, LOTTARIO, PICK 3 ★ T.T.C. ரிக்கற்றுகள்

வீடியோ, ஆடியோ ஒளி, ஒலிப்பதிவுகள் & வீடியோ பிரதி மாற்றும்
NTSC ◄► PAL

**1000 மேற்பட்ட தமிழ், மலையாள, சிங்கள வீடியோ திரைப்படங்கள்**

வீடியோ பிரதியில் இருந்து காட்சிகளை புகைப்படங்களாக மாற்றுதல்
*(SONY Colour Printing)*

வீடியோ ஒளிப்பதிவு நாடாமாற்றம்
UMATIC ◄► 8M.M. ◄► VHS ◄► BETTA ◄► C VHS

## வீடியோ கமராக்கள் வாடகைச் சேவை

**அதிவேக ஆடியோ ஒலிப்பதிவுகள்**
(100க்கு மேற்பட்ட ஒலிப்பதிவு நாடாக்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்)

வயலின், மிருதங்கம், தஞ்சாவூர் வீணை ஓடருக்கு எடுத்துக் கொடுக்கப்படும்

## ✿ பேஸ்ட் வே மார்ட் ✿

பெஸ்ட் வே மார்ட் ஸ்தாபனத்தாரின் மாதாந்த கழிவுக் கூப்பன்களை
"ரோஜா" இதழில் பெற்றுக் கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்படியா சமாச்சாரம்!

கணவனின் நின்றுபோக விருந்த இதயத் துடிப்பை மனைவியின் சாமர்த்தியம் காப்பாற்றியுள்ளது. மலசலகூடத்தில் வைக்கப்பட்டிருந்த ரப்பர் பம்பை உயிருடன் போராடிய கணவனின் மார்பில் வைத்து அமுக்கி காப்பாற்றிய இச்சம்பவம் சான்பிரான்சிஸ்க்-கோவில் நடந்துள்ளது!....

*****

கணவனின் ஆயுட்காப்புறுதிப் பணத்தைப் பெறும் நோக்குடன் குளிக்கும் தொட்டியில் மின்சாரம் பாய்ச்சிக் கொலை செய்ய முயன்ற பெண், தகவலறிந்த பொலிஸாரால் லண்டனில் கைதானார். கணவன் இறந்து விட்டால் பயன்படுத்தும் துக்க ஆடைகளையும் இந்த பெண் தயார் செய்திருந்தாராம்.

*****

சொரிஷ்மா சுலிம் (வயது 30) என்ற பொலிஸ் உத்தியோகத்தர் தமது கடமை நேரத்தில் அப்பிள் சாப்பிட்டபடி வாகனம் ஓட்டியதற்காக பாகிஸ்தான் நீதிமன்றம் ஒரு வருட சிறைத் தண்டனையும் ஆறு வருடங்களுக்கு வாகனம் செலுத்துவதற்கான தடையையும் விதித்துள்ளது.

*****

இந்த ஆண்டின் சமாதானத்திற்கான நோபல் பரிசை பலஸ்தீன விடுதலை இயக்கித் தலைவர் யாசீர் சுரபாத்துக்கும், இஸ்ரேலிய பிரதமர் இட்சாக் ராபினுக்கும் வழங்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

*****

ஹிட்லரின் மறுபிறப்பு எனத் தன்னைக் கூறிக் கொள்ளும் பிரான்ஸில் நீஸ் எனும் இடத்தைச் சேர்ந்த சாள்ஸ் ஏஞ்சலின் (வயது 43) என்பவர் ஹிட்லர் பற்றி அவதூறான செய்திகளைப் பிரசுரித்த பத்திரிகையாளர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக அறிவித்துள்ளார்.

*****

தன்னை அழகற்றதாக பெற்றெடுத்த தன் பெற்றோருக்கெதிராக நியூஸிலாந்தைச் சேர்ந்த 17 வயதுப் பெண் சிந்தயா பார் என்பவர் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார். 19 வயதில் 'பிளாட்டிக்' சத்திர சிகிச்சை மூலம் இவரை அழகுபடுத்து வதற்குப் பெற்றோர் ஒப்புக்கொண்டதன் மூலம் வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளது.

*****

அமெரிக்கா விண்வெளிக்கு அனுப்பி வைத்த ராக்கெட்டில் ஐந்து அமெரிக்க வீரருடன் ரஷ்ய வீரர் ஒருவரும் இடம் பெற்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஷ்ய வீரர் அமெரிக்க ராக்கெட்டில் பயணம் செய்வது இதுவே முதல் தடவை.

★★★★★

தன் அறையிலிருந்த வீடியோ கமெராவை இயங்கச் செய்துவிட்டு கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார் சுவிட்சலாந்தில் வசித்த 24 வயதான ஆனந்தரூபன் என்ற புங்குடுதீவு இளைஞன்.

★★★★★

டென்மார்க் ராணி மார்கிறட்டின் நாய் ஸெனோவியை காணவில்லை என்று இரவு பகலாக கொப்பன் ஹேகன் காடுகளில் தேடுதல் வேட்டை நடப்பதாகவும், இதனால் காடுகளில் ஆட்கள் நடமாட்டம் கண்டால் அச்சமடையத் தேவையில்லை எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

★★★★★

$ 10,000 பெறுமதியான கம்பளத்தின் மேல் சப்பாத்துடன் நடக்கவோ, சாப்பிடவோ கூடாது எனத் தனது கணவனுக்கு நீதிமன்றம் மூலம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளார் கிறிஸ்ரீன் ஹன் லெபன் என்ற 64 வயது டென்மார்க் பெண்.

★★★★★

1984ம் ஆண்டு அமிர்தசரஸ் நகரில் உள்ள சீக்கியரின் பொற்கோவிலுக்குள் இந்திய இராணுவம் பிரவேசித்து அங்கு தங்கியிருந்த தீவிர வாதிகள் மீது தாக்குதலை நடத்தியது. அச்சமயம் மத்திய அமைச்சராக இருந்த பூட்டா சிங் மீது நிர்வாகம் அத்துமீறிப் பிரவேசித்தலுக்கான உத்தரவை இராணுவத்திற்கு வழங்கியதற்காக 56 நாட்கள் பக்தர்களின் செருப்புகளைத் துடைக்குமாறு தண்டனை விதித்தது. பூட்டா சிங் தற்பொழுது தண்டனையை நிறைவேற்றியுள்ளார்.

★★★★★

தமிழ் நாட்டின் ஆளுனராக இருக்கும் சென்னா ரெட்டி தமிழ் பேராசிரியர் ஒருவரிடம் தமிழ்க் கற்று வருகின்றார்.

★★★★★

இளையராஜாவிற்கு 'ராஜரத்தினா' என்ற விருதை கலைஞர் கருணாநிதி வழங்கினார். ஐந்து வருடங்களுக்கு முன்பாக 'இசைஞானி' விருதையும் கலைஞரே வழங்கியிருந்தார்.

★★★★★

மூன்றாவது உலக யுத்தம் ஒன்றைத் தொடங்குவது பற்றிப் பிரசாரம் நடத்தி வரும் ரஷ்ய வலதுசாரி பாஸிஸ கட்சியின் தலைவர் விளாடிமிர் ஷிரினொவ்ஸ்கிக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது.

★★★★★

நான்கு திருட்டுப் பெண்களை கைது செய்த பஞ்சாப் மாநிலப் பொலிஸார் அவர்களின் நெற்றியில் Pickpocket எனப் பச்சை குத்தினார்களாம். விவகாரம் நீதிமன்றம் வரை சென்று பொலிஸாரின் செலவில் சத்திர சிகிச்சை மூலம் அகற்றப்பட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

- தீபன் - வதனன் -

★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## நான் சொல்லமாட்டன்
## அதைமட்டும்
## நான் சொல்லமாட்டன்

ஸ்காபுரோ ஆலயமொன்றிற்கு சென்ற பத்தர் ஒருவர் கூறியது:
ஐயா இறைவனுக்கு காட்டிவிட்டு கொண்டு வந்த தீபத்தை தொட்டுக் கும்பிட்ட போது, ஐயா தடுத்து, அர்ச்சனை தந்தவர்கள் மாத்திரமே கும்பிடமுடியும் என்றாராம். அதுமட்டுமல்ல "தேவாரம்பாடுக..." என்று சொன்னதும் தேவாரம் பாடிய ஒருவரை நிறுத்திவிட்டு இன்னுமொருவரை பாடும்படி பணித்தாராம். இதை ஆலய சர்வாதிகாரம் என்று நான் சொல்லமாட்டன்.

★★★★★

தமிழ் வர்த்தக நிலையமொன்றுக்கு தலைவாழையிலை வாங்கச் சென்ற தமிழ்த் தாய் இலை கிழிந்திருப்பதாக சண்டை பிடித்தாராம். தமிழ் கிழிந்தாலும் பரவாயில்லை ஆனால் தலைவாழை இலை மட்டும் கிழியக்கூடாது. இதை இங்கு நான் சொல்ல மாட்டேன்.



~ மணி ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் உலகத்தமிழ்ப் பண்பாட்டு மாநாடு...

கனடாவில் எதிர்வரும் ஆவணி மாதத்தில் நாங்கள் அதிவிமரிசையாகக் கொண்டாட இருப்பது உலகத்தமிழ்ப் பண்பாட்டு மாநாடாகும். இதனை உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட கனடியத் தமிழ்ப் பண்பாட்டு கழகம் புலம் பெயர்ந்து கடல் கடந்து கனடிய நிலம் அடைந்து வாழும் அனைத்துத் தமிழர்களையும் அணைத்து, அரவணைத்து அவர் தம் ஆதரவைப் பெற்று நடத்தத் திட்டம் தீட்டியிருப்பதோடு செயலாற்றவும் ஆரம்பித்துள்ளது.

இது ஆண்டுக்கு ஆண்டு, நாட்டுக்கு நாடு ஏன் ஊருக்கு ஊர் நடைபெறுகின்ற ஆண்டு விழாக்கள், வருடாந்த உற்சவங்கள், களியாட்ட நிகழ்ச்சிகள் போன்ற ஒன்றல்ல. இது சுழற்சி முறையிலும் உலகளாவிய வகையிலும் உலகில் தமிழர் பரந்து வாழும் நாடுகளில், செறிந்து வாழும் நகரங்களில் சிறப்பாக நிகழ்ந்து வரும் மாநாடாகும். இரண்டாண்டுகட்கு ஒரு தடவை தான் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு நடக்கும். இது பன்னிரெண்டு ஆண்டுகட்கு ஒரு முறை மலரும் குறிஞ்சிப் பூவல்ல. பன்னிரெண்டு ஆண்டுகளில் ஆறு தடவை பூத்தாலும் இம் மாநாடு பூபாளத்தில் வெவ்வேறு பாகங்களில் முளைத்து, மொட்டவிழ்ந்து மோகனஞ் செய்வதால் அதற்கில்லாத அருமையும் பெருமையும் இந்த உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டுக்கு உண்டு. இன்றைய இளந் தலைமுறை கூட இன்னொரு இஃதோரன்ன மாநாடு கனடாவில் நடக்கக் காண்பதென்பது இலகுவில் நடக்கக்கூடிய ஒன்றல்ல.

முந்தய மாநாடுகள் இந்தியாவில் சென்னையிலும், சேலத்தில் மௌரிசஸ் தீவிலும், கோலாலம்பூரிலும், அவுஸ்திரேலியாவில் சிட்னி மாநகரிலும் நடைபெற்றன. 1994 ஆம் ஆண்டில் 6ஆவது மாநாட்டைக் கனடாவிலும் 1996ஆம் ஆண்டிலும், 7ஆவது மாநாட்டை 1996இல் பிஜி தீவிலும் நடாத்துவதென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. மேலைய நாட்டினங்கள் பல மேலான வளர்ச்சியைப் பெற்று வாழ்ந்த காலத்திலேயே இனிய மொழி கண்டு, இலக்கிய வளம் கண்டு இலக்கண வரம்பு கொண்டு வாழ்ந்தது எங்கள் தமிழினம்.

*"தமிழன் என்றோர் இனமுண்டு*
*தனியே அவர்க்கொரு குணமுண்டு*
*அமிர்தம் அவனது மொழியாகும்*
*அன்பு அவனது வழியாகும்"*

என்ற கவிமணி அவர்களின் கவிதை வரிகள் அர்த்தத்தையும், ஆழத்தையும் அடுத்த இனத்தவர்கட்கு அறியக் கொடுக்க இது அரிதாமோர் வாய்ப்பு. பலவினங்கள் வாழும் கனடா நாட்டிற்கு எழுத்துக்களிலேயே வல்லினம், மெல்லினம், இடையினங்களைக் கொண்ட மேலான இனம் தமிழினம் எனக்காட்ட இதைவிட்டால் எமக்கு வேறு தோதான வாய்ப்பு கிடைக்கவே கிடைக்காது.

மேலும் மலர்த் தடாகத்தில் வாழ்கின்ற மண்டுகம் அதாவது தவளை மலர்களின் சுகந்த மணத்தையோ, அதிலுள்ள சுவையான மதுவையோ பற்றி அறியாமல் வாழ்வதுபோல தமிழர்களாகிய எம்மில் சிலரும் அந்நிய மொழி கலாச்சாரங்களுக்கு ஆட்பட்டு தமிழின இனிமையை, தனிமையை, தொன்மையை, மேன்மையை, மகிமையை அறியாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் தமிழின் மேன்மையையும் தேவையையும் அறிவுறுத்தவும் தமிழரிடையே ஒற்றுமையை வலியுறுத்தவும், அடுத்துவரும் தலைமுறைத் தமிழர்களும் தமிழர்களாக அதுவும் தமிழ் பேசும் தமிழர்களாக வாழவேண்டிய தேவைப்பாட்டை நிலைநிறுத்தவும் இந்த உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு பயன்படட்டும். வந்து குடியேறிய நாட்டில் தங்கள் சொந்த இலச்சினையையே இழந்து தாங்கள் தமிழர்கள் என்ற உண்மையை அறியாமலும் உணராமலும் வாழும் தமிழர்கட்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மாநாடு கட்டாய ஒரு திருப்பு முனையாக அமையும்.

எமது இலக்குகளையும் எதிர்பார்ப்புகளையும் எனது வார்த்தைகளில் சொல்வதை விட பாரதியாரின் பாடல் வரிகளில் சொல்வது பெருத்தமாக இருக்குமென நினைக்கிறேன்.

*"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரிர்*
*நிதி குறைந்தவர் காசுகள் தாரிர்*
*அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளிர்*
*ஆண்மையாளர்கள் உழைப்பினை நல்கிர்."*

இந்த மாநாடு இனதமிழ்த் திருவிழாவாக, இணையில்லாப் பெருவிழாவாக நடந்திட நிறைய நிதி தேவைப்படுகின்றது. சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் நடந்த உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளிலும், 1992ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நிகழ்ந்தேறிய உலகதத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டிலும் தமிழ் உணர்ச்சி வெள்ளம் பரிணமித்து, பரிமளித்து, பரிவகித்துப் பெருக்கெடுத்து ஓடப் பார்த்தோம். இத்தகைய தமிழ் உணர்ச்சிப் பிரவாகம் இங்கும் ஏற்பட பத்திரிகை அதிபர்கள், ஒலிபரப்பாளர்கள், ஆலயப் பரிபாலர்கள், விழாவெடுக்கும் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், மலர் அடிக்கும் மன்றங்கள் அனைத்தினதும் நல்வரவை நாடி நிற்கின்றோம்.

வசதி படைத்த பெரியவர்கள.. வர்த்தகப் பிரமுகர்களிடம் தாராளமான உதவியை எதிர்பார்த்து நிற்கின்றோம். கம்பராமாயண அரங்கேற்றத்திற்கு ஒரு சடையப்ப வள்ளல் போல் எங்கள் உலகத் தமிழ் மாநாட்டு ஈடேற்றத்திற்கு இவர்கள்தான் சடையப்ப வள்ளல்கள். நாம் "சுரபி" என்ற மகுடமிட்டு ஒரு இலவச செய்தி மடலைத் தொடர்ந்து வெளியிட உள்ளோம். அதற்கு ஏற்படும் செலவீனங்கட்கும் வர்த்தகப் பிரமுகர்களையே நம்பி நிற்கின்றோம். சுரபிதான் எங்கள் உத்தியோக பூர்வ வெளியீடாகும். அது காலத்திற்குக் காலம் நாங்கள் செய்யும் செயற்பாடுகள் பற்றியும், எங்கள் எதிர்பார்ப்புகள் பற்றியும் அறியத்தரும்.

நடக்க இருக்கின்ற மாநாடு செவ்வனே நடந்திட ஆண்மையாளர்கள் உழைப்பினையும் நாடி நிற்கின்றோம். ஆணும் பெண்ணும் சேராவிட்டால் அழகிருக்காது என்பார்கள். ஆம் அழகிருக்காது; ஆனால் அலுப்பிருக்கும். எனவே எமது நாளைய சந்ததிகளாம் நாளை நமதுகளின் நலம் நாடி எடுக்கும் இவ்விழா விடயத்தில் பெண்ணின் பெருமைகளின் ஒத்துழைப்பையும் பெரிதளவில் வேண்டி நிற்கின்றோம்.

~ கனடா தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் ~
பிரச்சாரக் குழு

---

# 50... Fifty... 50... Fifty...



~ எஸ். கே ~

"கனடாவில தீபாவளி இரண்டு நாள், வருசம் இரண்டு நாள், கார்த்திகை தீபம் இரண்டு நாள், தைப்பொங்கல் இரண்டு நாள், தைப்பூசம் இரண்டு நாள், ஆடி அமாவாசை இரண்டு நாளென்று முக்கிய நாட்களையும், விரதங்களையும் வைச்சு...... இன்றைக்கா.... நாளைக்கா...... என்று குழப்பிறாங்கள், ஆனால் சிவராத்திரிய இரண்டு நாள் எப்படி?......"

"நான் பிடிச்சனே..... இரண்டு நாள்....."

"எப்படியடாப்பா?...."

"முதல் நாள் 12 மணிவரையும், மற்ற நாள் 12 மணியிலிருந்து......, Fifty...Fifty...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ரோஜா"

## கலை, இலக்கிய மாத சஞ்சிகையால் நடாத்தப்படும் கவிதை, சிறுகதை, கட்டுரைப் போட்டிகள்

### முதற் பரிசு தங்கப்பதக்கம்

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் ஜூலை 1. 94 அன்று நடைபெறவுள்ள ஆண்டு விழாவின் போது வழங்கப்படும்

## கவிதைப் போட்டி

கீழ் பிரிவு - (19 வயதிற்குட்பட்டோர்)

மேற் பிரிவு - (19 வயதிற்கு மேற்பட்டோர்)

- ♦ எற்கனவே எழுத்துத் துறையில் இருப்பவர்கள்
- ♦ புதிய எழுத்தாளர்கள்

**'எனது மண் எனக்கு வேண்டும்', 'சுதந்திரக் காற்றை நான் சுவாசிக்க வேண்டும்', 'விடியல்கள் தொலைவில் இல்லை'**

இத்தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, மரபுக்கவிதையாயின் 30 வரிகளுக்குக் குறையாமலும் 50 வரிகளுக்குக் கூடாமலும், புதுக்கவிதையாயின் 60 வரிகளுக்குக் குறையாமலும் 80 வரிகளுக்குக் கூடாமலும் எழுதப்பட வேண்டும்

## சிறுகதைப் போட்டி

கீழ் பிரிவு - (19 வயதிற்குட்பட்டோர்)

**கனடாவில் தமிழர்கள் / எமது கலாச்சாரம் / தமிழ் மொழி**

இவைகளை மையமாக வைத்து 8 பக்கங்களுக்கு குறையாதவாறு சிறுகதை எழுதப்பட வேண்டும்.

மேற் பிரிவு - (19 வயதிற்கு மேற்பட்டோர்)

- ♦ எற்கனவே எழுத்துத் துறையில் இருப்பவர்கள்
- ♦ புதிய எழுத்தாளர்கள்

**கனடாவில் எமது சமுதாயத்தின் மாற்றம் / சீதனப் பிரச்சனை / பெண்கள் அடிமைகள் அல்ல / காதல்**

இவைகளை மையமாக வைத்து 10 பக்கங்களுக்கு குறையாதவாறு சிறுகதை எழுதப்பட வேண்டும்.

## கட்டுரைப் போட்டி

கீழ் பிரிவு - (19 வயதிற்குட்பட்டோர்)

மேற் பிரிவு - (19 வயதிற்கு மேற்பட்டோர்)

- ♦ எற்கனவே எழுத்துத் துறையில் இருப்பவர்கள்
- ♦ புதிய எழுத்தாளர்கள்

**கனடாவில் தமிழர்கள் / எமது கலாச்சாரம் / தமிழ் மொழி**

இவற்றில் ஒன்றினைத் தெரிவு செய்து கீழ் பிரிவாளர்கள் 4 பக்கங்களுக்கு குறையாமலும், மேற் பிரிவாளர்கள் 6 பக்கங்களுக்கு குறையாமலும் எழுதப்பட வேண்டும்.

- ★ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
- ★ ஜூன் 10ஆம் திகதிக்கு முன்னதாக 'ரோஜா'வுக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப் படவேண்டும்.
- ★ மாதிரி விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களுடன் இணைத்து அனுப்பவும்.

(தரமாக தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் 'ரோஜா'வில் தொடர்ந்து பிரசுரிக்கப்படும்.)

### மாதிரி விண்ணப்பப்படிவம்

----------------------------------------

முழுப்பெயர்

----------------------------------------

----------------------------------------

முகவரி

(          )

----------------------------------------

தொலைபேசி இலக்கம்

----------------------------------------

வயது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டம்
# கவித்

விபச்சாரி

சாக்கடைக்குள்
தலைபுதைத்த
விலையற்ற
முத்துக்கள்
பசி விலைபேச
காம விலைக்கு
மனசாட்சியை
விற்கும்
பாவப்பூக்கள்

- மணி -

தெருவீதி

ஓ தெரு வீதியே...
காயம் வராமல் - நீ
காப்பாற்றுகிறாய்
பார்த்தாயா மனிதனை
உனக்கு வந்த
காயங்களை அவன்
கவனிப்பதே இல்லையே...

- ராகினி -

பத்தினி

இவள்
பூ
அல்லவே...
ஏனென்றால்
இவள்
பத்தினி

- செல்வி -

மே

தொழிலாளிக்கு
கடமையைக் குறைத்தாய்
கடன்காரருக்கு
சுமையைக் கூட்டினாய்
அதெப்படி....
நீ மட்டும்
குறை மாதமாய்....
எழுதி முடிப்பதற்குள்
எழுந்து ஓடிவிட்டாயா?....
என்ன?!....

- தீபா -

LOTTO 6/49

சோம்பேறிச்
சோலைக்குள்
ஒழிந்திருந்து
திடமில்லா
மனிதர்களின்
பணத்தினை விழுங்கி
ஏமாற்றும்
அதிஷ்டக்காரி

- ராஜா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. தமிழின் பொருள் அன்புடைமை

**சலம்பூ வொடுதூ பம்மறந் தறியேன்**
**தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்**

என்று பாடுகிறார் திருநாவுக்கரசு சுவாமிகள். இதில் "தமிழோடு இசை பாடல் மறந்து அறியேன்" என்ற அடி பலரையும் குழப்பி வருகின்றது. "தமிழோடு இசை பாடல்" என்ற தொடருக்கு "பண் இசை கலந்த தமிழ்ப் பாடல்" என்றும் "இனிமை யாக வாழ்திப் பாடுதல்" என்றும் பலவாறாகப் பொருள் கண்டு வருகின்றனர்.

தமிழ் என்பதற்கு இனிமை என்று பொருள் கொள்வது பொருந்தும். 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்று பாடினார் பாரதிதாசன். தேவர்கள் திருப்பாற் கடலை அமுது பெறக் கடைந்தபொழுது 'அமிழ்து அமிழ்து' என்று ஆவலுடன் சொல்லிச் சொல்லிக் கடைந்தார்களாம். பாற் கடலில் அமிழ்து தோன்றுவதற்கு முன்னதாகவே தேவர்களின் வாய்களில் தமிழ் ஊறிவிட்டது. அதன்பின் பாற்கடலமுதைத் தேவர்கள் உண்டபோது தமிழ் அமுதோடு கலந்து சொல் இனிமையுடன் பொருள் இனிமையும் பெற்றுக் கொண்டதாம். தமிழ் தேவாமிர்தம் போன்று சுவையானது என்பதனை எடுத்துக் காட்டத் தமிழ் அபிமானிகள் கண்ட சுவையான கதை இது. இக் கதையில் ஓர் உண்மை இருக்கவே செய்கின்றது. அதனை எவரும் மறுக்கமுடியாது. அமிழ்து என்ற சொல்லை வாயிற் போட்டுக் கடைய, அதாவது அடுத்தடுத்துச் சொல்ல, தமிழ் என்ற சொல் உண்டாவது உண்மை. இது சொற் புணர்ச்சியின் விளைவு.

தமிழ் அமுதைப் போன்று இனிக்கச் செய்வது அதன் இலக்கிய வளம். தமிழ் இலக்கியத்தில் தோய்பவர்களே இந்த இனிமையை முழுதாக அனுபவிக்க முடியும். தமிழ் இலக்கியத்தின் உரிப்பொருள் அன்பு. தமிழ் இனிமைக்குப் பிறப்பிடமாவதும் இந்த அன்பாகிய பாற்கடலேயாம். அதனால் தமிழுக்கு அன்பு பொருள் ஆகின்றது.

**என்னைநன் றாக இறைவன் படைத்தான்**
**தன்னைநன் றாக தமிழ்செய்யு மாறே**

என்ற திருமூலர் வாக்கில் 'தமிழ் செய்தல்' என்பது அன்பு செய்தல் என்ற பொருளில் வந்திருப்பதைக் காணலாம். இந்தக் கண்ணோடு, இனித் திருநாவுக்கரசு நாயனாரின் அடிகளை நோக்கின் உண்மைப் பொருள் விளங்கும்.

'தமிழோடு இசை பாடல் மறந்து அறியேன்' என்பதற்கு 'அன்போடு நினது புகழை (இசை - புகழ்) பாடுதலாகிய தொழிலை அடியேன் என்றைக்கும் மறந்ததில்லை' என்று பொருள் கொள்வதே பொருத்தமானதாகும்.

ஆகவே, தமிழுக்கு அன்பு என்று பொருள். தமிழ்ப் பண்பு அன்பின் அடிப்படையில் அமைந்தது. தமிழ்க் கலாச்சாரம் அன்புக் கலாச்சாரம். தமிழ் மொழி - அன்பு மொழி. தமிழர்கள் - அன்பர்கள்.

**- கவிஞர் வி. கந்தவனம் -**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GRAND OPENING GRAND OPENING

GRAND OPENING GRAND OPENING GRAND OPENING GRAND OPENING

GRAND OPENING GRAND OPENING GRAND OPENING GRAND OPENING

# GOPAL FURNITURE

ஏப்ரல் 23ஆம் திகதி முதல் ரொரன்ரோ
மாநகரில் புதியதொரு ஸ்தாபனம்

## கோபால் பேனிச்சர்ஸ்

★ அலுமாரி (இலங்கை & கனடாவில் உள்ளதுபோல்)
★ மேசைகள், கதிரைகள் ★ கம்பியூட்டர் மேசைகள்
★ குழந்தைகளுக்கான தொட்டில்கள்

மற்றும் உங்களுக்குத் தேவையான சகலவிதமான தளபாடங்களையும் உறுதியாக செய்து கொள்வதற்கும், உங்கள் வீட்டுத்திருத்த வேலைகளையும் (basement Work) குறைந்த செலவில் செய்து கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரேயொரு ஸ்தாபனம்.

*GOPAL FURNITURE*

2178 Eglinton Ave. W
Toronto, Ont.
Tel: (416) 785-9544 Pager: 330-5100

உங்களுக்குத் தேவையான Moving சேவைகளை நம்பிக்கையுடனும், பொறுப்புணர்வுடனும் செய்து கொள்ள எம்மை நாடுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசமான கலைஞன்...

எதிர்பாராத விதமாக அந்த இசை மின்னல் என் காதுகளில் மோதியதால் காதுகள் பழுத்து விட்டது. என்னைப் பொறுத்தவரை அவர் ஒரு வித்தியாசமான கலைஞன். அவர்தான் நண்பன் முல்லையூர் பாஸ்கர். மொன்றியலில் வீசும் காற்றில் இவரது இசை இருக்கின்றது. கலைப்பிரியர்களுக்கு இவரது குரல் நன்கு ஞாபகம் இருக்கும். இவர் பல இசைக்குழுவுடன் இணைந்து பற்பல பாடல்களை டொரன்டோ, மொன்



றியல் ஆகிய நகரங்களில் அள்ளி வழங்கியிருக்கின்றார். பாஸ்கர் மேடைகளில் தோன்றி சினிமா பாடல்களை தந்து போவதை மாத்திரம்தான் நாம் யாவரும் பார்த்திருக்கின்றோம். ஆனால் இவரது பூரண திறமைகளையும் நாம் வெளிப்படுத்தத் தவறி விட்டோம். நான் முதன்முதலில் முல்லையூர் பாஸ்கரை சந்தித்த போது அவர் ஒரு பாடகர் என அறிந்தேன். அவரது பாடலை கேட்க ஆசையாக இருந்தது. கேட்டால் தப்பாக நினைப்பாரோ என நினைத்தேன். ஒருவழியாக ஒரு பாட்டுப் பாடும்படி கேட்டேன். கட்டாயப்படுத்தவில்லை. அவர் சம்மதித்தார். அருமையாகப் பாடிக்காட்டினார். அவரது குரல் கணீர் என்று அவ்வளவு இனிமை. இளையராஜா, எஸ். பி. பாலசுப்பிரமணியம் என்றால் இவருக்குப் போதும். அவரது பாடல்களை கேட்பதும், பாடுவதும் என்றால் இவருக்குப் போதும். ஏகலைவன் கதை படித்ததுண்டு. முல்லையூர் பாஸ்கர் அதற்கு உதாரணம். நான் ஏன் ஏகலைவனை வம்புக்கு இழுத்தேன் என உங்களுக்கு சிந்திக்கத் தோன்றும். ஏன் என்றால் இவரால் சொந்தமாக பாடல் இயற்றி இசை அமைக்கவும் ஆற்றல் உண்டு. கீ போட் (Key board) மூலம் மட்டும் பல இசைக்கருவிகளின் இசையை ஒன்றிணைத்து அதனை கணணியின் (Computer ) நரம்புகளில் ஏற்றி நம் காதுகளில் பாய்ச்சுகின்றார். இது சுலபம் என Key board கற்றவர்களுக்கு நினைக்கத் தோன்றும். இதில் என்ன அதிசயம் என்றால் அவர் நிஜமாகவே சங்கீதத்தையோ, கீ போட்டையோ முறையாகக் கற்கவில்லை. இவரது சோந்த முயற்சியிலேயே வாசிக்கின்றார்.

இவரது ஒரு சில பாடல்களை நான் கேட்டதுண்டு. அவை நம் நாட்டுப் பாடல்கள் போல் அல்லாது இந்திய சினிமாப் பாடல்களை போல் இனித்தது. இவரது முழு நேரத்தையும் இசையிலேயே செலவழிக்கின்றார். ஒரு தனி மனிதனால் தனது சொந்த இசையில், குரலில் ஒரு பாடலைத் தருவது என்றவுடன் இவரை பாராட்டாமல் விட்டால் தப்பாகி விடாதா?. அதுவும் இவருக்கு சங்கீத பாட அனுபவம் கிடையாது. இப்போது நூற்றுக்கணக்கான இசை வாத்தியக் கருவிகளுடன் மேடையில் தோன்றி சினிமாப் பாடல்களையே தரும் கலைஞர்கள் மத்தியில் இவர் ஒரு வித்தியாசமானவர். விரைவில் இவரது பாடல்கள் சொந்த இசையில் லேசர் இசைத் தட்டு, ஒலி நாடா இவைகளில் தாங்கி நம் காதுகளில் தவழப் போகின்றது. அதற்கான முயற்சியில் நண்பன் முல்லையூர் பாஸ்கர் ஈடுபட்டுள்ளார். அவரது இந்த முயற்சியின் வெற்றிக்காக ரோஜா சார்பிலும் எம் வாழ்த்துக்கள்.

~ திருமலை மைந்தன் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டாவா கால்டன் தமிழ் மாணவர் மன்றத்தின்... "முத்தமிழ் விழா"

மனதிற்கு ஒரு நம்மதி வேண்டுமாயின் நாம் கோயிலுக்குப் போவோம் அங்கு இறைவனை வழிபடும் போது எந்த தீய சிந்தனையும் இருக்காது. மனதில் சற்று நேரம் நிம்மதி கிடைத்தது என்றே சொல்லத் தோன்றுகிறது. இதேபோல் எல்லாத் தமிழ் மக்களையும் ஒரு அரங்கத்தில் சந்திப்பது என்பது எமக்குக் கிடைத்த அதிஷ்டம் என்றே சொல்லலாம்.

விடிந்தால்.... பாடசாலை, பல்கலைக்கழகம், வேலை... என்று நிம்மதியற்ற வாழ்க்கை வாழும் மார்ச் 19ஆம் திகதி ஓட்டாவா கால்டன் தமிழ் மாணவர்கள் ஒரு அரிய சந்தர்ப்பத்தை தந்தார்கள். குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்ச்சிகள் தொடங்கவில்லை என்றாலும், தமிழ்தாய் வாழ்த்துடன் தொடங்கிய விழாவைத் தொடர்ந்து...., வரவேற்புரை, தமிழ் இசை, கர்நாடக இசை, 'ஆனந்த நடமிடும் பாதம்'-கீர்த்தனை, 'மூங்கிலிலே வரும் ராகம்'- வாத்திய இசை என நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.......






முதலாவது நாடகமாக.... 'காலங்கள் மாறினாலும்' கால்டன் தமிழ் மாணவர்களினால் வழங்கப்பட்டது. இதில் நகைச்சுவை, நடிப்பு, மற்றும் பார்வையாளர்களின் மனதை உருக்கும் வகையில் கதையும் அமைந்திருந்தது. இந்த நாடகம், எமது கலை கலாச்சாரமே வேண்டாம் என்று கூறி ஒரு பொழுதுபோக்கிக்காக வந்திருந்த சிலரின் மனதில் ஓர் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். இதைத் தொடர்ந்து...., 'மின்மினிகள் கண்மணி'களின் 'கிராமிய நர்த்தனம்' கோலாட்டம் இடம்பெற்றது. பங்கு பற்றிய அனைவரும் நன்றாக ஆடினார்கள். மீண்டுமொரு முறை பார்க்க வேண்டும் என்ற அளவுக்கு நன்றாக இருந்தது.

இரண்டாவது நாடகமாக.... 'ஒற்றுமை நீங்கின்' என்ற நாடகம் இடம்பெற்றது. இந்த நாடகம் மக்களின் ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்டுவதாக இருந்தது. மக்கள் நாங்கள் ஒன்றாக சேரவேண்டும்; குறிப்பாக ஆணும் பெண்ணும் ஒன்றாக சேர்ந்தால் எந்த எதிர்ப்பையும் சமாளிக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. விசயம் பெரிதாக இருந்தாலும் குறுகிய நேரத்தில் முடித்துவிட்டார்கள். இந்த நாடகத்தில் பங்கு பற்றியவர்களின் தொகை அதிகமாக இருந்ததால் நடிப்பு குறைவாகவே இருந்தது.

எந்த அளவிற்கு நல்லன செய்யினும் ஒரு சிறு தவறையே சுட்டிக் காட்டும் எமது சமுதாயத்தினரிடையே இப்படி ஒரு கலை நிகழ்ச்சி வைப்பது கஷ்டமான விடயமே. இந்த நோக்கில் பார்க்கும்போது 'ஒட்டாவா கால்டன்' தமிழ் மாணவர்கள் எமது கலை கலாச்சாரத்தை நிலைநிறுத்துவதற்கு எடுத்த முயற்சி மிகவும் பாராட்டுக்குரியதே.




~ தம்பி லிங்கம் ~ (ஒட்டாவா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆசிய வர்த்தக மஞ்சரி

தமிழர்களின் மத்தியில் 5ஆண்டு காலமாக 'தமிழர் மத்தியில்' என்னும் வர்த்தக மஞ்சரி தவழ்ந்து வருவது அனைவரும் அறிந்ததே. இந்த ஆண்டு புதியதோர் மஞ்சரியான 'ஆசிய வர்த்தக மஞ்சரி' எஸ். சி. ரம்யா பிரின்டிங் லிமிட்டட் உரிமையாளர் திரு. எஸ். சாள்ஸ் இராஜரெட்ணம் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த மஞ்சரி சென்ற ஆண்டு வெளியிடப்படுவதாக இருந்து, பின் அந்த எண்ணம் கைவிடப்பட்டது. இந்த மஞ்சரிக்கு அறவிடப்படும் விளம்பரத் தொகை குறைவாகையால் அநேக வர்த்தக ஸ்தாபனங்கள் அடுத்த ஆண்டுக்கான விளம்பரங்களை தாம் தருவதாக உறுதியளித்திருப்பதாக தெரிகிறது. இந்த மஞ்சரி மேலும் தமிழர் மத்தியில் மலர 'ரோஜா' வாழ்த்துகின்றது.

## 'சங்கவி'

சமீபத்தில் 'சூரிய கிரண் ஆட்ஸ்' இனால் வெளியிடப்பட்ட 'சங்கவி' தமிழ் லேசர் இசைத்தட்டு பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது. புலம் பெயர்ந்து நாம் வாழ்ந்தாலும் எமது மொழி, கலாச்சாரத்தை பேணி பாதுகாக்க வேண்டியது தமிழர்களின் கடமையாகும். இதேபோல ஈழத்தவர்களின் முயற்சிகளைப் பாராட்டி, ஆதரித்து கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் வளர்க்க வேண்டியது ஈழவர்களாகிய எங்களின் கடமையாகும்.

'சங்கவி' இல் உள்ள அனைத்துப் பாடல்களும் தரமாகவே இருக்கின்றது. குறிப்பாக 'கண்கள் தினம் காணும் விழா'- (நடா ஜெயதேவன் & சுகன்யா ரகுநாதன்), 'பாட்டொன்று பாடும்'- (குணரெட்ணம் கிரிதரன்), 'கண்ணுறங்கு அன்புத் தாயே'-(ஜ"தேசன் சூசைதாசன்), 'விடியாத இரவோடு எம்மக்களே'-(அழகையன் செந்தூரன்), 'நாடோடிப் பாட்டு'- (ஆனந்தப் பிரசாத்)....... இவை அனேகருக்குப் பிடித்தமான பாடல்கள். இதைவிட 'ஆத்தி ஆத்தங்கரையோரம்'- (அழகையன் & கௌரி பாஸ்கரன்), 'சங்கீதக்குயில் பாடுது'- (சிவசுந்தர் சொக்கலிங்கம் & ராணி சங்கர்) இசைப்பில் கேட்பதற்கு இதமாகவே இருக்கின்றது.

பாடல்களை மேகலச் சந்திரன் பாலசுந்தரம் எழுதி இளையகலைஞரும், அநேகரின் பாராட்டையும் பெற்ற குணரெட்ணம் கிரிதரன் இசையமைத்திருக்கிறார். இந்தக் கலைஞர்களின் முயற்சியை 'ரோஜா' பாராட்டுவதுடன் மேலும் இதுபோன்ற தரமான இசைத்தட்டுக்களை வெளியிட வாழ்த்துகின்றது.

~ திருமலை செல்வன் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிங் றிச்சாட்ஸ்

கிரிக்கட் உலகில் பெரும் புகழீட்டிய சிங்கம் ஒன்று ஓய்வு எடுக்கின்றது. அது வேறு யாருமல்ல மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் காப்டன் ஐசாக் விலியன் அலக்சாண்டர் றிச்சாட்ஸ் (I VA Richards) ஆவார். 1974-75ஆம் ஆண்டுகளில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் உலகரங்கிற்கு அறிமுகமாகிய இவர், டெஸ்ட் பந்தாட்டங்களில் 1991ஆம் ஆண்டு ஓய்வு எடுத்தபோதிலும், முதல் தர கிரிக்கட்டில் இருந்து கடந்த வருடமே ஓய்வு பெறுகிறார்.

மிகச் சிறிய தீவாகிய 'லீவாட்ஸ் ஐலண்டில்' பிறந்த இவர்; தனது பிறந்த இடத்தின் பெயரை உலகின் பல இடங்களில் நிலைபெறச் செய்துள்ளார். கிரிக்கட் உலகில் றிச்சாட்டுக்கு நிகர் றிச்சாட்ஸ்தான். இந்த றிச்சாட்ஸ் 1974ஆம் ஆண்டு தனது இரண்டாவது டெஸ்டில் இவரின் ஓட்ட எண்ணிக்கை 12ஆக இருந்தபோது சுழல் பந்து வீச்சாளர் வெங்கட் ராகவனின் பந்துக்கு, விக்கட் கீப்பர் பாருக் எஞ்சினியரால் பிடிக்கப்பட்டபோது, நடுவர் அதை 'கார்ச்' அல்ல என்று சென்னபடியால், அவர் தொடர்ந்து 192 ஓட்டங்களை எடுத்து, தொடர்ந்து மேற்கிந்திய தீவுகள் கோஸ்டியில் நிலையான அங்கத்தவராக இருந்தார்.

1986ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் ஒன்றில், முதல் நான்கு டெஸ்டிலும் வெற்றி ஈட்டிய மேற்கிந்திய அணி, 5ஆவதிலும் வெல்ல வேண்டும் என்ற ஆவலில் குறிப்பிட்டநேரத்தில் அதிக ஓட்டங்களை குவிக்கவேண்டியிருந்தது. அப்போதைய அணியின் தலைவர் லொயிட், றிச்சாட்ஸ் இடம் இப் பொறுப்பைக் கொடுத்தார். தனக்கே உரித்தான புன்முறுவலுடன் தலைவரின் கட்டளையை நிறைவேற்ற ஆடுகளத்தில் புகுந்த றிச்சாட்ஸ், 58 நிமிடங்களில் 56 பந்துகளைச் சந்தித்து 7 சிக்ஸர்களின் துணையுடன் 110 ஓட்டங்களைப் பெற்றார். இது ஓர் உலக சாதனையாகும். துரிதமாக பந்துகளை அடிப்பதில் வல்லவரான றிச்சாட்ஸ் இனால் 5ஆவது டெஸ்டையும் மேற்கிந்தியாவே வென்றது. தனது ரண்களில் மட்டும் கவனம் வைக்காது, கோஷ்டியின் வெற்றியைக் குறிக்கோளாக வைத்து களத்தில் ஆடுபவர்களில் முதன்மையானவர்.

121 டெஸ்ட் பந்தயங்களில் விளையாடிய றிச்சாட்ஸ் 24 சதங்கயின் துணையுடன் 8540 ஓட்டங்களைக் குவித்தார். 1976இல் இங்கிலாந்திற்கு எதிரான ஒரு போட்டியில் எடுத்த 291 ஓட்டங்களே இவர் எடுத்த அதிகூடிய ஓட்டமாகும். இவரைவிட அதிக ஓட்டங்களைக் குவித்த வீரர்கள் போடர், கவாஸ்கர், மியன்டாட் ஆகியோர் ஆவர். 40 டெஸ்ட்களில்



காப்டனாக இருந்த இவர், 23 பந்தயங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியீட்டியிருக்கிறார். 1985ஆம் ஆண்டிலிருந்து 1990ஆம் ஆண்டு வரையிலான இவரது கப்டன் பதவிக் காலத்தில் ஒரு தொடரையும் தோற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய கிறிக்கட் உலகில் பிரபலமான ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் றிச்சாட்ஸ் இற்கு நிகர் எவருமே இல்லை. மொத்தம் 6721 ஓட்டங்களை 187 போட்டிகளில் பெற்றுள்ள இவர் தனது மெதுவான பந்து வீச்சின் மூலம் 118 விக்கட்டுகளை வீழ்த்தியுள்ளார். அத்துடன் 101 காட்சுகளையும் பிடித்துள்ளார். வரையறுக்கப்பட்ட ஓவர் போட்டிகளில் ஆரம்ப துடுப்பாடி வீரர்களுக்கே செஞ்சரி அடிக்கும் சந்தர்ப்பம் உண்டு. ஆனால் நடு வரிசை (Middle order) ஆட்டக்காரரான இவர் 11 செஞ்சரிகளை அடித்துள்ளார். இவரைவிட அதிக செஞ்சரி அடித்தவர்கள், இவரது சகவிளையாட்டுக்காரர்களான டெஸ்மன் ஹயின்ஸ் - 16, கிறீன்டின் - 11. இவர்கள் இருவரும் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாவர். ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் இவரின் சராசரி ஓட்ட எண்ணிக்கை 47. இதை எவராலும் முறியடிக்கமுடியாதென்று கணிப்பாளர்கள் கணிக்கின்றனர். இங்கிலாந்துக்கு எதிராக மான்ஸ் செஸ்டர் மைதானத்தில் ஆட்டமிழக்காது பெற்ற 189 ஓட்டங்களே தனி நபர் ஒருவரால் பெறப்பட்ட அதிகூடிய ஓட்டமாகும். இந்த இனிங்ஸில் கடைசி விக்கட்டுக்கு சோடியாக மைக்கேல் ஹோல்டிங்குடன் சேர்ந்து 106 ஓட்டங்களைப் பெற்றதும் ஒரு உலக சாதனையாகும்.

அண்மையில் கிரிக்கட் உலகிலிருந்து ஓய்வு பெற்ற இயன் போதத்தின் நெருங்கிய நண்பரான றிச்சாட்ஸ், தன்னை ஒரு கறுப்பினத்தைச் சேர்ந்தவர் என்று சொல்வதை பெருமையாகக் கருதுகின்றார். 'போதம்'இன் திருமணத்தின் போது மாப்பிள்ளை தோழனாக இருந்தவர் இந்த றிச்சாட்ஸ் தான்.

இங்கிலாந்தில் அதிககாலம் சமசெற் (SOMERSET) அணிக்கு விளையாடிய றிச்சாட்ஸ் 1991ஆம் ஆண்டிலிருந்து 93 வரை 'கிளமோர்கன்' அணிக்கு விளையாடினார். மிக நீண்ட காலத்திற்கு பின் 1993இல் சமர்செற் அணி றிச்சாட்ஸ் இன் சிறந்த துடுப்பாட்டத்தால் சம்பியனானது. உலக அரங்குகள் எங்கும் றிச்சாட்ஸின் ஆட்டம் ரசிகர்களால் மிக மிகப் பாராட்டப்பட்டது. பிராட்மன்ஸிற்குப் பிறகு எல்லாவகை மக்களாலும் கவரப்பட்ட ஆட்டக்காரர் இவரே ஆவர். றிச்சாட்ஸ், கிரிக்கட் ஆடுவதில் இருந்து ஓய்வு பெற்றாலும்; நல்ல நிர்வாகியாக கிரிக்கட் உலகில் இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவரது அபார ஆட்டத் திறமை காரணமாக 'சார்' (Sir) பட்டம் மகாராணியால் கொடுக்கப்படலாம் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

## ~ வாசு ~

## விளையாட்டுச் செய்திகள்

இந்தியாவுக்கு கிரிக்கட் சுற்றுலாவை மேற் கொண்ட இலங்கைக் கிரிக்கெட் கோஷ்டி, படுதோல்வியைத் தழுவிக்கொண்டது. மூன்று டெஸ்ட்டுகளிலும் இனிங்ஸ் தோல்வியைத் தழுவிக்கொண்டது. மூன்றாவது டெஸ்டில் நட்சத்திர ஆட்டக்காரரான கபில்தேவ் கர்சன் திலகரத்தினாவை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் தனது 432ஆவது விக்கட்டை எடுத்து உலக சாதனை புரிந்தார். 86 டெஸ்டுகளில் 431 விக்கட்டுகளை வீழ்த்திய நியூசிலாந்து ஆட்டக்காரரான சேர் (Sir) றிசசாட் ஹட்லியின் சாதனை இதனால் முறியடிக்கப்பட்டது.

இச்சுற்றுலாவை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பிய கிரிக்கட் கோஷ்டி பலத்த கண்டனத்துக்குள்ளானது.

அவுஸ்ரேஸியாவைத் (Austrasia) தொடர்ந்து சஜாவில் நடைபெறும் வெற்றிக்கிண்ணத்திற்கான போட்டிகளுக்கு அரவிந்த டி சில்வா தெரிவுசெய்யப்படாமையால் கப்டன் றணதுங்கா தான் போட்டியில் கலந்து கொள்ளவில்லையென அறிவித்தார். இதனைத் தொடர்ந்து சுழல் பந்து வீச்சாளர் கிரிதரன், வேக பந்து வீச்சாளர் பரமோதயா விக்கிரம சிங்க ஆரம்ப துடுப்பாட்டகாரர் துளிப் சமர வீர ஆகியோரும் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவில்லை. இதனால் கொழும்பு மாநகரில் தெரிவுக்குழுவுக்கு பலத்த எதிர்ப்பு காட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு

விளையாட்டு அமைச்சைச் சேர்ந்த டாக்டர்களான கீதாஞ்சா மென்டிஸ், லலித் ரெட்ணாயக்கா ஆகியோரினால் நடாத்தப்பட்ட Fitness test இன் மூலமே விளையாட்டு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்பதை சுட்டிக்காட்டிய தெரிவுக் குழுவைச் சேர்ந்த துலுப் மென்டிஸ், ரோயல் டயஸ், கே.எம்.ஆர். மடுகல்ல, சகபத்து ஆகியோர் தமது பதவியை ராஜிநாமா செய்துள்ளனர்.

பத்திரிகை மாநாட்டை கூட்டிய அரவிந்த டி சில்வா 15நிமிடங்களில் ஓடவேண்டிய 3000m தூரத்தை தான் 14 நிமிடங்களில் ஓடியதாகக் கூறி, மருத்துவர்கள் வேண்டு மென்றே தன்னை புறக்கணித்துள்ளார்கள் என குற்றஞ்சாட்டினார். தற்போது றொஸான் மகநம இலங்கையணிக்கு தலைவாராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## உலக சாதனை

ஏப்ரல் 18-1994 அன்று சென்ஜோன்ஸ் அன்டிகாவில் நடைபெற்ற 5வது கிரிக்கட் போட்டியில் மேற்கு இந்தியத் தீவு அணியைச் சேர்ந்த 24 வயது பிரையில் லாரா தனது அபாரத் துடுப்பாட்டத்தின் மூலம் 375 ஓட்டங்களை எடுத்து உலக சாதனை புரிந்துள்ளார். 36 வருடங்களுக்கு முன் கிங்ஸ்டன், ஜமேக்காவில் சேர் (Sir) சோபஸ் அவர்களால் ஆட்டமிழக்காமல் 365 ஓட்டங்கள் பெற்ற சாதனை இதன் மூலம் முறியடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாட்டத்தில் பிரையில் 45 பவுன்டரிகளை விளாசித் தள்ளினார். இவரின் சாதனையைக் கண்டு ரசித்த சேர் (Sir) சோபஸ் சாதனை முறியடிக்கப்பட்டதும் மைதாணத்தின் மத்தியில் சென்று லாராவை ஆரத் தழுவிய கண்கொள்ளாக் காட்சியை கண்டு ரசித்த ரசிகர்கள் உணர்ச்சி வசப்பட்டு கர கோசம் செய்தனர்.



## கால்பந்தாட்டம்

ஐக்கிய அமெரிக்காவில் நடைபெற இருக்கும் உலகக் கோப்பைக்கான போட்டிகள் ஜுன் மாதம் ஆரம்பமாகும். ஒரு மாதகாலம் நடக்கும் இப்போட்டிகளில் புத்தக மதிப்பீட்டாளர்களின் கணிப்பின்படி மேற்கு ஜேர்மனி, பிரேஸில், இத்தாலி ஆகிய நாடுகளுக்கே கூடுதலான சந்தர்ப்பம் இருப்பதாகக் கூறுகிறார்கள். உலகப் பிரசித்திபெற்ற ஆட்டக்காரர் மரடோனா மீண்டும் பத்திரிகைக் காரருடன் முறைகேடாக நடந்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன. அடிக்கடி கோபப்படும் இவர் அமெரிக்காவில் நடைபெறும் உலகக் கோப்பைக்கான போட்டியில் கலந்து கொள்வாரா என்பது இப்போது கேள்விக் குறியாகிவிட்டது. என்ன இருந்தாலும் அவரின் விளையாட்டை ரசிக்க லட்சோப லட்சம் ரசிகர்கள் உலகெங்கும் உள்ளனர்.



## ICE HOCKEY
## ஐஸ் ஹொக்கி



Wayne Gretzky



Gordle Howe

உலகின் புகழ் பெற்ற வீரரான வெயின் கிரெற்ஸ்கி மற்றோரு சாதனையை மேறகொண்டுள்ளார். 26 சீசன்களில் 801 கோல்களைப் போட்ட கோடி கோவின் சாதனையை 15 சீசன்களில் முறியடித்துள்ளார். சபாஷ் கிரெற்ஸ்கி!

IRI
AUTO SERVICES
வாகனங்களின் சகல திருத்த வேலைகளுக்கும்
S.J.ROOBAN TEL: (416) 696-5273



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாநதி

## சினிமா... சினிமா...

மகத்தான நடிப்பாற்றல் கொண்ட உன்னதமான கலைஞன் என்பதை மீண்டும் மீண்டும் வித்தியாசமான கரெக்டர் மூலமாக நிரூபித்து நிலைநாட்டி வரும் கமலின் மற்றுமொரு மாறுபட்ட படைப்பு மகாநதி.

தமிழ்த் திரைப்பட உலகல் நல்லதொரு படத்தை எப்போ காண்போம் என ஏங்கிய ரசிகர்களின் பசியை போக்கியது மட்டுமின்றி, படத்தைப் பார்த்த அனைவரும் சோகங்களை சுமந்துகொண்டு வீடு திரும்பியதைக் காணமுடிந்தது. இதுவே இந்த திரைப் படத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

பொதுவாக தமிழ் திரைப்படங்களில் பாடல்காட்சிகளையும், சண்டைக் காட்சிகளையும் சேர்க்க வேண்டுமென்று அனைத்து தயாரிப்பாளர்களும் நினைப்பதுண்டு. மகாநதி இதிலிருந்து முற்றிலும் மாறுபடுகின்றது. ஒரு மனிதரின் வாழ்க்கையில் நடப்பவைகளை மட்டுமே எடுத்துக் காட்டும் இத்திரைப்ப



டத்தின் கதை, திரைக்கதையை கமல் எழுதி வசனத்தை கமலும் ரா.கி. ரங்கராஜனும் கருத்து செறிவோடு எழுதி

ரோஜாவின் போட்டிக்குரிய உங்கள் பதில்களுடன் இந்தக் கூப்பனையும் இணைத்து அனுப்புங்கள்.

Name :- ........................................

Address :- ........................................

........................................

City :- ........................ Postal Code :- ........................

Tele :- ........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சிவா ஜுவலரி

ஒன்ராறியோ வர்த்தக சம்மேளத்தின் சிறந்த சேவைக்கான விருது பெற்ற நிறுவனம்

**SRI SIVA JEWELLERY**

721 Bloor St.W., Toronto, Ontario, M6G 1L5

**(416) 531-4867**

உங்களது அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள நாடுங்கள்

# துவாரகாஸ்

PRINCESS PLAZA

1670 VICTORIA PARK. AVE. TORONTO, ONTARIO

**(416) 757-1091**

*NILA VIDEO*

# நிலா வீடியோ

*(905) 472-9676*

நி
லா
வீ
டி
யோ

திருமணம்!
அது வாழ்வில் வசந்தத்தின் வரவு......
அந்த நினைவுகள் உங்கள் வாழ்வில்
பசுமரத்தாணியாகப் பதிக்கப் படவேண்டியவை......
உங்கள் எண்ணங்களை நாங்கள்
வண்ணத்தில் பதித்துத் தருகிறோம்!......
புதிய **தொலைக்காட்சிக் கமரா** மூலம்
அவற்றை அழியாத ஓவியமாக்குகிறோம்.

**VICTOR**
**(905)**
**472-6976**
"இளைய நிலா"
தயாரிப்பாளர்

அரங்கேற்றம், கலைவிழாக்கள் மற்றும் மேடை நிகழ்ச்சிகள்
தரமான முறையில் பதிவு செய்து தரப்படும்!

# ROJAH

F.P.P.O., P.O. Box 45593,
747 Don Mills Rd,
Don Mills, Ont. M3C 3S4, Canada.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கிறார்கள்.

கிராமத்தில் மதிப்போடும், சந்தோஷ மாகவும் வாழ்ந்து வரும் கிருஷ்ண சாமி என்பவர், நகரைத்தைச் சேர்ந்த

டேந்தி கோஷ்டி காணம் பாடுவதற்கும் ஹீரோவும் வில்லனும் மோதுவதற் குமே பயன்படுத்தப்படும். மகாநதியில் வரும் சிறைக்காடச்சிகள் முற்றிலும்



போலியொருவரின் பேச்சை நம்பி சீட் டுக்கம்பனி ஆரம்பித்து, அவனால் ஏமாற்றப்பட்டு, சொத்துக்களை இழ ந்து, தனது இரு பிள்ளைகளையும் பிரிந்து ஜெயிலுக்குப் போகிறார்; அங் கும் தர்மத்திற்காக போராடி, சித்திர வதைகளை அனுபவித்து, தண்டனைக் காலம் முடிந்ததும் விபச்சார விடுதிக்கு அனுப்பிய தனுஷ் என்ற வஞ்சகனை யும் அவனது கூட்டாலியையும் பழி வாங்குவது கதை.

வழமையாக தமிழ் திரைப்படத்தில் சிறைக் காட்சிகள் அலுமினிய தட்

மாறுபட்டு....., கிருஷ்ணசாமி என்கின்ற அப்பாவிக்கு ஏற்படும் கொடுமைகளை எடுத்துக் காட்டுகின்றது. அவனுக்கு வீரம் வரும்போது காட்டும் எதிர்ப்பு உணர்ச்சிகள் விரைவிலேயே சிலுவை யில் அறையப்படுகின்றது.

குறிப்பாக... இந்த படத்தில் நகைச் சுவைக்காக கவுண்டமணி, செந்தில், வடிவேலு போன்ற நகைச் சுவை நடிகர்களுக்கென்று சில காட்சிகளை உருவாக்கி கதையை திசைதிருப் பாது....., கதையோடு ஒட்டிய நகைச் சுவை ரசிக்கத் தக்கதும் படத்தினைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்பவர்களை கிருஷ்ணாவின் வாழ்க்கையோடு ஒன்றவும் செய்கின்றது.

பொதுவாக கமல் எந்த வேடத்தில் தோன்றி நடித்தாலும் அந்த பாத்திரத்திற்கு உயிரூட்டி விடுவார் என்பது எல்லோரும் அறிந்த விடயமே. இந்தப் படத்தில் விபச்சார விடுதியிலிருந்து அழைத்து வந்த மகள் 'விடுங்கடா' என்று தூக்கத்தில் உளறுகின்ற போது 'அட பாவிகளா' என்று கமல் அலறும் இந்த காட்சி பார்ப்பவர்களின் கண்களைக் குளமாக்கி விடுகின்றது.

மகாநதி என்று இப்படத்திற்கு பெயர் சூட்டியதற்கு பல காரணங்கள் இருக்கலாம். கமலின் நடிப்பை பொறுத்தவரையில் இப்படத்தில் அவர் ஒரு மகா சமுத்திரம் என்று நிரூபித்து விட்டார்.

இப்படத்தில் வரும் கதாநாயகி சுகன்யா, கமலுடன் கைதியாக நடிக்கும் பூர்ணம் விசுவநாதன், ஏமாற்றுப் பேர் வழிகளா தோன்றியுள்ள வி.எம்.சி ஹனி.்.பா, மோகன் நடராஜன், கமலின் மாமியாராக வரும் எஸ்.என். லட்சுமி, பிஞ்சு மகளாகத் தோன்றும் ஷோபனா, சிறுவன் தினேஷ், ஜெயிலிலே ரௌடித்தனம் செய்யும் துலுக்காணம் என்ற ரோலில் நடித்திருக்கும் ஜெயபிரகாஷ்.., இவர்களின் இத்தனை கரெக்டர்களும் சின்னதோ பெரியதோ நமது மனதில் ஆழமாக பதிந்து விடுகின்றன.

தமிழ் திரையுலகில் முதன் முதலில் கம்பியூட்டர் மூலம் எடிட்டிங் செய்யப்பட்ட இப்படத்திற்கு கம்பியூட்டர் மோகம் கொண்ட கமலின் முயற்சியில், உன்னதமான இசையமைப்பு வழங்கிய இசைஞானி இளையராஜாவும், இப்படத்தின் ஒளிப்பதிவாளர் எம்.எஸ். பிரபுவும், இயக்குனர் சந்தான பாரதியும் பாராட்டுக்குரியவர்கள்.

~ தரன் ~

நன்றி: ஜூனியர் விகடன்



ஏ.வி. கிரியேஷன்ஸ் 'மனிதா மனிதா' படத்துவக்க விழாவில் ரஜினிகாந்த், டாட்டர் ராஜசேகர், செந்தில், செல்வா, சுப்பிராமி ரெட்டி, டைரக்டர் பி. கோபால், ஜீ.வி.

சென்ற இதழுக்கான சினிமா சினிமா கேள்விக்கான பதில்: **'ராஜபார்வை'**

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி: எஸ். இளம்பருத்தி (நோத் ஜோக்)

இந்த இதழுக்காக சினிமா சினிமா கேள்வி: **பிரபுவின் 100வது படம் எது?**

உங்கள் பதில்களை ஜூன் 1-94க்கு முன்னர் 'ரோஜா'க்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனி மாற்றம் உங்கள் ராசிக்கு...

ஜனவரி இதழின் தொடர்ச்சி.......

**மிதுனம்**

(மிருகசீரிடம் 3ஆம் கால், திருவாதிரை, புனர்பூசம், 1ஆம், 2ஆம், 3ஆம் கால்கள்)

இவ்வளவு காலமும் அட்டமத்துச் சனியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த உங்களுக்கு 11-02-94 முதல் விடிவு காலம் பிறக்கும். சனி 9இல் வருவது அனுகூலம் இல்லாவிட்டாலும் 9ஆம் வீட்டு அதிபதியாக சனி தன் சொந்த வீட்டில் ஆட்சி பெறுவதால் குடும்பத்திலிருந்து வந்த பிரச்சனைகள், மாணவர்களின் கல்வியிலிருந்து வந்த சிக்கல்கள் போன்றவை அகன்று சுபீட்சத்தை நோக்கி நடைபோடுவீர்கள். 6 இலுள்ள ராகுவின் சஞ்சாரத்தால் வெற்றி வாய்ப்புகள் உண்டாகும்.

1994 ஆரம்ப காலத்திலிருந்து பெப்ரவரி மாதம் வரை பல சோதனைகளைச் சந்திக்க நேரிடும். நவம்பர் மாதம் தொடக்கம் குரு 6ஆம் இடத்திற்குப் போவதால் நற்பலன்கள் குறையும். பொருளாதாரத் துறையில் பல சிக்கல்களைச் சந்திக்க நேரிடும. நவம்பர் மாதம் சனி வக்கிர நிவர்த்தி பெறுவதாலும், செவ்வாயின் பலன் கூடுவதாலும் பிரச்சனைகளை ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவீர்கள். பெண்களால் மனதில் சஞ்சலம் ஏற்படும். பெப்ரவரி 1995 ஆம் ஆண்டு செவ்வாய் வக்கிர கதியில் 2 ஆம் இடம் வருவதால் குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு.

மார்ச் மாதம் 20ஆம் திகதி 1995ஆம் ஆண்டு தொடக்கம் சனி மாற்றமடையும் வரை எல்லா வகையிலும் நல்ல திருப்பம் உண்டாகும். வியாபாரிகள், நிர்வாக நிர்வனத்துறைகளைச் சேர்ந்தவர்கள், உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் திறமைக்கேற்ப பலன்களைப் பெறுவார்கள். மந்தமான சூழ்நிலைகள் மாறி சுறுசுறுப்பான சூழ்நிலை ஏற்படும். கணவன், மனைவி உறவு நன்றாகவே இருக்கும். சத்துருக்களையும் சுமுகப்போக்கில் இயங்க வைப்பவன் சுக்கிரன். மனை, வாகனம் மூலமாக தனவரவை உண்டாக்கும். சூரியனதும் உத்தயோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு பதவி உயர்வு. இடமாற்றம் போன்ற நன்மைகளையும் உண்டாக்கும். அயல் நாட்டு செய்தி நன்மை பெறும்.

**கடகம்**

(புனர் பூசம் 4ஆம் கால், பூசம்,ஆயிலியம்)

உங்கள் ராசிக்கு 7 ஆம் இடத்திலிருந்த சனி 8 ஆம் இடத்திற்கு வருகிறான். சனி தன் சொந்த ராசியான கும்பத்தில் சதய நட்சத்திர சார எல்லையான ராகுவின் சாரத்தில் செல்லும். ராகு உங்களுக்கு பகை கிரகம் என்பதைக் கவனிக்க வேண்டும்.

சனி சொந்த வீடாக இருந்த போதிலும் அட்டமத்தில் ராகு சாரத்தில் செல்வதால் அட்டமத்துச்சனி என்று பயப்படவேண்டியிருக்கிறது. சனி உங்களுக்கு மாரகாதிபதி என்பதால் கெட்ட பலன்களைச் செய்யக் கூடியவனாக இருக்கிறான்.




முதலிரண்டு மாதங்களுக்குத்தான் கெட்ட பலன்களை அனுபவிக்க வேண்டும். உங்கள் ராசிக்கு 8ஆம் இடத்தில் செவ்வாயும், சனியும் சோதனை தரக்கூடிய கிரகங்கள். இந்த 8ஆம் இடத்தை வியாழன் நோக்குவதால் நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. நிச்சயம் உங்கள் நிலைமைகள் யாவும் சீரடையும். 31-08-95 வரை ஒரு பொன்னான காலமாகும். ஆகையினால் இந்தக் காலகட்டத்தை சிறப்பாக அமைத்துக் கொள்ளுங்கள்.

**சிங்கம்**

(மகம், பூரம், உத்தரம் 1ம் கால்)

இதுவரை 6ம் வீட்டில் இருந்து நன்மை புரிந்த சனிபகவான் களத்திரஸ்தானமான 7ம் வீட்டில் சஞ்சரிக்கவுள்ளார். வாழ்க்கைத் துணையின் உடல்நலம் பாதிப்பு அடையலாம். மணவாழ்க்கையில் சிக்கல்கள் தோன்றலாம். குரு சஞ்சாரமும் அனுகூலமின்றியிருப்பதால் கூடிய கவனம் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல தேசா புத்தி நிகழ்பவர்களுக்கு சுப பலன்களை எதிர்பார்க்கலாம்.

**கன்னி**

(உத்தரம் 2ம், 3ம், 4ம் கால்கள், அத்தம், சித்திரை 1ம், 2ம் கால்கள்)

இது வரையில் 5இல், நஞ்சாகத் திகழ்ந்து, பொருளழிவையும், மனக்கிலேசத்தையும் உண்டுபண்ணிய சனி பகவான் 6இல் சஞ்சாரம் செய்ய இருப்பது, லஷ்மிகரத்தையும், பதவியுயர்வு போன்ற முன்னேற்றங்களையும் எதிர்பார்க்கலாம். தனஸ்தானமான 2இல் குரு சஞ்சாரம் செய்வது மிகவும் அனுகூலமானதாகும்.

**துலாம்**

(சித்திரை 3ம், 4ம் கால்கள், சுவாதி, விசாகம் 1ம், 2ம், 3ம் கால்கள்)

இதுவரை 4ம் இடமான மனை, வாகன சுகஸ்தானத்தில் சஞ்சாரம் செய்து, பலருக்கு மனை, வாகனாதி சுக சொகுசுகளைப் பாதித்து வந்த சனி பகவான், இனி 5ம் இடத்தில் சஞ்சரிக்கும்போது பொருள் விரையம், மனக்கிலேசம் என்பவற்றை அளிக்கும் அறிகுறிகள் தென்படுகிறது. ஆயினும் உங்கள் ராசி சனி பகவானுக்கு உச்ச வீடாகத் திகழ்வதாலும், சனி சஞ் சாரம்செய்யும் கும்பராசி சனிக்கு மூலத்திரிகோண ஆட்சி வீடாகத் திகழ்வதாலும் அதிக கெடுதல் விளைவிக்காது என நம்பலாம். 3-11-1994 இன் மேல் குரு சஞ்சாரம் அனுகூலமாக அமைவதால் நன்மைகள் எதிர்பார்க்கலாம்.

**விருச்சிகம்**

(விசாகம் 4ம் கால், அனுசம், கேட்டை)

இதுவரை 3ம் இடத்தில் அமர்ந்து நன்மைகளை அளித்த சனிபகவான், இனி 4ம் இடத்தில் அமர்ந்து மனை, வாகனாதி சுக சொகுகளில் பாதிப்பை ஏற்படுத்தப் போகிறார். குருவின் சஞ்சாரமும் விரையஸ்தானத்தில் நிகழ்வதால் இழப்புக்கள் சர்வசாதாரணமாக இருக்கும். 3-11-1994 இன் மேல் சற்று முன்னேற்றம் காணப்படும்.

**தனுசு**

(மூலம், பூராடம், உத்தராடம் 1ம் கால்)

இதுவரை 7½ சனியின் அட்டகாசத்திற்குள் சிக்குண்டு அல்லலுற்றுப்போன உங்களை விட்டு 7½ சனி பிரிகின்றார். இனி நன்மைகள் விளைவதற்கு தடையேதுமிருக்காது. குருபகவான் சஞ்சாரமும் லாபஸ்தானமான 11இல் 3-11-1994 வரை நிகழவிருப்பதனால் இக்காலத்தை நல்ல முறையில் பயன்படுத்தி முன்னேற்றத்துக்கு வழி சமைத்துக் கொள்ளுங்கள்.

**மகரம்**

(உத்தராடம் 2ம், 3ம், 4ம் கால்கள், திருகோணம், அவிட்டம் 1ம், 2ம் கால்கள்)

நீங்கள் 7½ சனியின் கடைக்கூற்றுக்குள் வருகின்றீர்கள். 7½ சனியின் கஷ்டபலன்கள் கொஞ்சம், கொஞ்சமாக குறைந்து வருவதை அவதானிப்பீர்கள். 3-11-1994இல் குருமாற்றம் லாபஸ்தானத்துக்கு வருவதால் நன்மைகள் அடைவீர்கள். ஆயினும், குடும்ப விவகாரங்களில் நெருக்கடிகள் தோன்றாதவகையில் பார்த்துக்கொள்ளவும்.

**கும்பம்**

(அவிட்டம் 3ம், 4ம் கால்கள், சதயம், பூரட்டாதி 1ம், 2ம், 3ம் கால்கள்)

இதுவரை 7½ சனியின் முதற்கூற்றில் பலவித இழப்புகளையும் அனுபவித்த உங்களுக்கு சனி பகவான் உங்கள் ராசியில் சஞ்சரிக்கும்போது உடல் நலத்தில் பாதிப்புகளைத் தர தொடங்கலாம். குரு சஞ்சாரம் 3-11-1994 வரை அனுகூலமாக இருப்பதாலும் உங்கள் ராசி சனிபகவானுக்கு மூலத்திரிகோண ஆட்சி வீடாகத் திகழ்வதாலும் பெருத்த கெடுதல்கள் விளையாது என நம்பலாம். கொடுக்கல் வாங்கல் விடயங்களில் தொடர்ந்தும் கவனம் தேவை.

**மீனம்**

(பூரட்டாதி 4ம் கால், உத்தரட்டாதி, ரேவதி)

இதுவரையில் லாபஸ்தானமான 11இல் அமர்ந்து உங்கள் பொருள்வருவாயை சீராக கவனித்த சனிபகவான் இனி 7½ சனி முதற்கூறான விரையஸ்தானத்தில் சஞ்சாரம் செய்ய இருப்பதால், சகல வித இழப்புகளையும் சந்திக்க நேரிடலாம். குரு அட்டத்தில் 3-11-1994 வரை சஞ்சரிப்பதால் இக் காலத்தில் மிகுந்த கவனம் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஞ்சுளா பாஷன்



- ★ மங்கையர் தம் நெஞ்சையள்ளும் வகை வகையான புடவைகள், பஞ்சாபி உடைகள், நவநாகரீக ஆடைகள்
- ★ ஆண்களுக்கான சட்டைகள், பருத்தி, பட்டு வேட்டிகள்
- ★ சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட புதிய டிசைன் களில் 22கரட் தங்கநகைகள், ஆபரணங்கள்
- ★ இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எவர்சில்வர் பாத்திரங்கள்

5818 SHEPPARD AVE. EAST
SUITE# 203, SCARBOROUGH

Tel: (416) 297-9875/297-5872
(Spice Landக்கு முன்பாக)

---

# S.K.BALES
## DRIVING SCHOOL

- ☑ அரச அனுமதி பெற்ற சிறந்த சாரதிப் பயிற்சியாளர் (முன்னாள் ஸ்கந்தா ஆசிரியர்)
- ☑ முதற்தடவையில் எழுதுப் பரீட்சையில் (Written Test) சித்தியடைவதற்குரிய சுலபமான அதிவிசேட பயிற்சி வகுப்புக்கள்
- ☑ வாகனப் பயிற்சிக்கு: மணித்தியாலம் **$19** மட்டுமே

**LEARNING AND DRIVING**

**265-3920**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(விராட் விஸ்வப் பிரம்மனே நம)

# THAARANI JEWELLERY
# தாரணி ஜுவலறி

*உங்கள் அனைத்து ஆபரணங்களையும்*
*சிறந்த கை வேலைப்பாடுகளுடன் செய்துகொள்ள*

THAARANI JEWELLERY
**Tel: (416) 289-6556**
3630 Lawrence Av. E., Unit #03, Scarborough
(Markham & Lawrence)

## 24 மணித்தியாலத்துக்குள் வருமான வரிப்பணத்தை மீளப்பெறலாம்!



**உங்கள் வருமான வரி**
**மீளல் விண்ணப்பப் பத்திரத்தை**
**மின் கணணியூடாக**
**(Electronically) செலுத்தி**
**காசோலையாக**
**உடன் பெறலாம்**



# PAN-TAX INC.

868 Markham road, Unit 103, Scarborough
**Tel: (416) 438-5000**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவா சின்னத்தம்பியின்

# இன்னமும் வேண்டும்

அரிசியை அவித்தெடுத்து
அதனை அன்னமென்போம்
அதி அழகாய் சமைத்தெடுத்து
அறுசுவை ருசி என்போம்
இதை விட இனியேது சுவை என்றோம்
உறைப் பென்றோம்
உறைப்பையே சிறப்பென்றோம்
ஊறுமிளகாயை உயிரென்று
உள்ளூற உமிழ்ந் தெடுத்து
வாயூறி வந்தவர் நாம்
ஊரில் தலை நிமிர்ந்து வாழ்ந்து
எவ்வளவோ தலைமுறையாய்
தலை வாழை இலை போட்டு
தரை மீது புற்பாய் விரித்து
தலைப் பந்தியிலே உட்கார்ந்து
மலை போலக் குவித்து
மோர் மிளகாயோடு தயிருற்றி
கரை மீது கறி சேர்த்து
கத்தரிக்காய் குழம்போடு
கருவேப்பிலை மணக்க
பயத்தங்காய் பருப்பு நெய்
பாயாசம் பால் பழம்
இத்தனையும் சேர்த்து
இதற்கும் மேல் சொதி வேறு
இதமோ இதமென்று
இளைப்பாறி விட்டு
தலை தூக்கத் தாங்காது
எச்சி இலை தூக்க இனம்வேறு அவர்

சரியான சாதி இல்லை
சம பந்தியுமில்லை என
மரியாதையும் குறைத்து
சாதி பல வளர்த்து
சாதனைகள் செய்தவர் நாம்
சாதி வெறிபிடித்த
சாதகர்கள் தாம் இன்று

வேதனையில் வேதனையோ
வேலை பல தேடி
வேளை கெட்ட வேளையிலும்
வேலை ஒன்று ஏற்று
நடு இராத்திரியில்
நம்மவரும் அல்லாத
நாலு சாதியரும்
நக்கித் தீர்த்து விட்ட கோப்பைகளை
நல் வடிவாய் சலவை பண்ணிவரும்
எமக்கு இதுவும் வேண்டும்
இன்னமும் வேண்டும்!


**சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

**1994 வருடாந்த போதுக்கூட்டம்**

காலம்: ஏப்ரல் 30ம் திகதி (சனிக்கிழமை)
நேரம்: 4:30 மணி
இடம்: EMBERS (Victorien Room)
781 Warden Ave (one block south of Eglinton)
Scarborough For Direction: (416) 751-9740
தொடர்புகளுக்கு: (416) 724-6402

மறுமலர்ச்சி மாணவர்கள் பெருமையுடன் வழங்கும்

**சிதறிய முத்துக்கள்**

2வது ஆண்டாக சிதறிக் கிடக்கும் தமிழ்க் கலை வடிவங்களை கோலமிட்டுக் காட்டி முத்துச்சரமாக கோர்த்தெடுத்து அள்ளிக் கொட்ட வருகிறார்கள்.

காலம்: மே 21ம் திகதி (சனிக்கிழமை)
நேரம்: மாலை 6:00 மணி
இடம்: மிட்லான்ட் கல்லூரி கலையரங்கம்
720 Midland Ave, Scarborough




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ அன் பிறதர்ஸின்

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சு | 2 ப | 3 ம | 4 ங் | 5 க | 6 ளா |
| 7 ரா | 8 தி | 9 ல | 10 ந் | 11 தி | ■ |
| 13 ஜ் | ■ | 15 ர் | ■ | 17 ர | 18 தி |
| 19 மே | 20 டை | ■ | 22 ல் | 23 வ | 24 ந் |
| 25 ன | ■ | ■ | 28 ம | 29 ன் | 30 க |
| 31 ன் | 32 ண | 33 ண் | 34 க | ■ | 36 ன் |

### இடமிருந்து வலம்.

1. கோமல் சுவாமிநாதனை ஆசிரியரா கக் கொண்ட இந்திய சஞ்சிகை
8. தோல்விகளைக் கண்டு துவளாமல் வலைபின்னி வெற்றிபெறும் ஜீவன்
17. காமனின் கனவுக்கன்னி
19. அரங்கத்தில் நிகழ்ச்சி நடைபெறும் பகுதி
28. புத்திரன் குழம்பி வருகின்றான்.
34. மண்ணையும், வெண்ணையும் உண்டவன் வலமிருந்து இடமாக.....

### மேலிருந்து கீழ்.

1. ஒரு நடிகையின் கணவன் ஆனால் ஒரு இயக்குனர்.
2. சிறந்த படங்களில் ஒன்றான இதை இயக்கியவர் துரை.
3. மரத்தின் ஒரு அங்கம், ரோஜா கூட ஒரு இதுதான்.
5. சூரியன்
18. சந்திரன்
34. சகலகலா வல்லவன், கீழ்லிருந்து மேலாக இருக்கிறான்.

உங்கள் பதில்கள் யாவும் ஜூன் 1-1994ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக, முதலாம் பக்கத்தில் உள்ள 'ரோஜா' வின் முகவரிக்கோ அல்லது FAXக்கோ 25ஆம் பக்கத்திலுள்ள 'ரோஜா கூப்பனுடன்' அனுப்பி வையுங்கள். ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. சரியான பதில்களை எழுதும் அதிஷ்டசாலிகள் இருவருக்கான பரிசில்களை ஸ்ரீ அன் பிறதர்ஸ் ஸ்தாபனத்தினாரால் அனுப்பிவைக்கப்படும்.

குறுக்கெழுத்துப் போட்டி: 3இன் முடிவுகள் ஜூலை மாத இதழிலே வெளியிடப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 2

குலுக்கள் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு அதிஷ்டசாலிகள்:-

1. ராஜன் சோமசேகரம் (சுவிஸ்)
2. தமேந்தி ராஜரெட்ணம் (எட்டோபிக்கோ)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பா | 2 வே | 3 ந் | 4 த | 5 ர் | ■ |
| 7 ர | 8 த | 9 ம் | 10 டி | 11 ர | 12 க |
| 13 தி | 14 ம் | 15 பு | ■ | 17 அ | 18 டி |
| 19 யா | ■ | 21 ரு | 22 ன | 23 ம | 24 வா |
| 25 ர் | 26 ம | 27 ச | ■ | 29 னை | 30 ன |
| ■ | 32 நோ | 33 ன் | 34 பு | ■ | 36 ம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா

## நன்றியுள்ள நாய்

**"பாலைப் பொழிந்து தரும் பாப்பா - அந்தப்
பசு மிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்து வரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா."**

ராஜாஜி பட்டணம் என்ற ஊரில் விசுவ நாத சர்மா என்றொரு செல்வந்தர் வசித்து வந்தார். அவர் மிகவும் நல்ல வர்; ஆதலால் ஜனங்கள் அவரைச் சர்மா மாமா என்று அன்போடு அழை த்து வந்தார்கள். அவர் திருமணம் செய்து கொள்ளாமல் தம் பணத்தினால் ஊருக்கே உழைத்து நன்மை செய்து வந்ததால் மக்கள் அவரை மிகவும் போற்றி வந்தார்கள். சர்மாமாமா மனி தர்களிடம் மட்டுமன்றி, மிருகங்களிட மும் மிகவும் இரக்கம் காட்டி அவை களுக்கும் தம்மாலான உதவிகளைச் செய்து வந்தார்.

ஏராளமான பணத்தைக் கொண்டு சர்மா மாமா நல்ல முறையில் சிறப் பான ஒரு பால் பண்ணை அமைத்து நடத்தி வந்தார். அவர் பசுக்களை அன்போடு பராமரித்து வந்ததால் அவை நிறையப் பால் தந்தன. சர்மா மாமா தினந்தோறும் ஏழைக் குழந்தை களுக்கு இலவசமாகவே பால் வழங்கி வந்து மக்களின் அன்பிற்கும், மதிப்பிற் கும் மேலும் பாத்திரமானார்.

ஒருநாள் சர்மா மாமா தனது பால் பண்ணையைச் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பிய போது ஒரு தெரு நாய் குட்டிகள் போட்டு பலவீனமாகப் படுத் துக் கிடந்ததைக் கண்டார். அது பசி யால் துடித்துக் கொண்டிருந்ததை உணர்ந்த போது அந்த உத்தமரின் மனம் பாகாய் உருகியது. உடனே அவர் தாமே விரைந்து சென்று ஒரு தட்டு நிறையப் பாலை அவரே வைத் தார். பாலை அருந்திப் பசி தீர்ந்த அந்த நாய் அவரைக் கண்டு வாலை ஆட்டி தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தது.

அன்று முதல் நாள் தவறாமல் சர்மா மாமா தாமே அந்த நாய்க்குப் பாலும், சோறும் அளித்து வந்தார். நாயும் அவ ரைக் கண்ட போதெல்லாம் வாலை ஆட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்து வந்தது.

ஒருநாள் இரவு ஒரு திருடன் வந்தான். அவன் மெல்ல அடிமேல் அடிவைத்து சர்மா மாமாவின் வீட்டிற்குள் குதிப் பதை அந்தத் தெரு நாய் எப்படியோ பார்த்து விட்டது. அவ்வளவுதான்; உடனே அது பலமாக "வள்", "வள்" என்று குரைக்க ஆரம்பித்து விட்டது.



அதன் குரைப்பை அடக்கும் எண்ணத் தோடு திருடன் அதன் முன் ஒரு ரொட்டித் துண்டை வீசி எறிந்தான். அப்படியும் அந்த நாய் குரைப்பை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தவில்லை. மேலும் பலமாகக் குரைத்துக் கொண்டேயிருந்தது.....

அதைக் கண்ட திருடனுக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. தன் கையிலிருந்த குண்டாந் தடியால் அதன் தலையில் ஓங்கி ஒரு போடு போட்டான்! அந்தோ பாவம்! அந்த நாய் அலறிக் கொண்டே விழுந்து மடிந்தது.

ஆனால் அதற்குள் அதன் குரைப்பும் அலறலும் கேட்டு அக்கம் பக்கத்தில் எல்லாரும் விழித்துக் கொண்டு விட்டார்கள்.

செத்துக் கிடந்த நாயைக் கண்ட போது சர்மா மாமாவிற்கு மிகவும் வருத்தம் உண்டாயிற்று. அவர் அதன் குட்டிகளை மட்டுமல்ல; அனாதையாகத் திரியும் நாய்களுக்கும் அன்று முதல் பாலும் சோறும் படைத்து ஆதரித்து வரலானார்.

குழந்தைகளே! தனக்கு சோறு போட்டு ஆதரித்த மனிதருக்காகத் தன் உயிரையே கொடுத்து நன்றி செலுத்திய நாயின் உயர்ந்த குணத்தைப் பார்த்தீர்களா? சர்மா மாமாவைப் போலவே நீங்களும் நாய்களிடம் இரக்கம் காட்டி வாருங்கள். மிகவும் நன்றியுள்ள ஜீவனான நாய் சமயம் நேர்ந்தால் தன்னை ஆதரித்தவர்களுக்காக நிச்சயம் உயிரையும் கொடுத்துவிடும். ஆகவே அதனிடம் அன்பு காட்டி வாருங்கள்.

~ நன்றி: பாரதி கதைகள் ~

## அன்பு

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர்.**
**அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"**
இது திருவள்ளுவர் வாக்கு.

உலகத்திலே உண்மையான பொருள் அன்பு. இது ஒரு விலை மதிக்க முடியாத பொருள். இந்த அதிசயப் பொருளை எந்த கடையிலோ வாங்கவோ விற்கவோ முடியாது. இது எமது உள்ளத்தில் இருந்து உற்பத்தியாகும் உணர்ச்சி மிக்க சக்தியாகும் ஆண்டவன் படைப்பில் அன்புக்கு நிகராக எதுவுமே இல்லை. அன்பானது எவ்வளவு மென்மையானதோ அவ்வளவு வலிமையானதும் ஆகும்.

இதனால்தான் அன்புக்கு எதனையும் சாதிக்கும் வல்லமையுண்டு. அன்பினை பாசம் என்பர், நேசம் என்பர், காதல் என்பர். மொத்தத்தில் அன்பானது இனிமையானது. அன்புக்கு அடிமைப் படாதவர்கள் இவ்வுலகில் இருக்க முடியாது. ஐந்தறிவுள்ள மிருகங்கள் கூட பாசத்துடனும், நேசத்துடனும் வாழ்வதை நாம் பார்க்கிறோம். அன்பினைக் கூறும் தத்துவங்கள் ஆயிரம் உண்டு. புத்தரும், யேசுவும், காந்தியும், நபிகள் நாயகரும், ஸ்ரீ ராமகிருஷ்ணரும், விவேகானந்தரும் போதித்தவை அன்புடைய அசைக்க முடியாத தத்துவமே.

ஆகவே அன்பாக பேசுங்கள், அன்பாகப் பழகுங்கள் அன்பினை பிற உயிர்களிடத்திலும், மற்றையோரிடமும் காட்டுங்கள். இவ்வுலகில் அன்பு தான் இன்ப ஊற்று. அன்பு தான் உலக மகா சக்தி.

– முகுந்தன். கு. சி –
Crecent Town Public School
தமிழ் வகுப்பு மாணவன்

உங்கள் சிறுவர் ஆக்கங்களை 'ரோஜா'வுக்கு அனுப்பிவையுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சங்கள்

- B.R.ரஞ்சனி -

வீட்டுப் பூந்தோட்ட இருக்கையில் ராஜி அமர்ந்துகொண்டு மேலே பார்த்தாள். க்விக்... க்விக்.... காகா... கீச்.... கீச்.... என ஒலிகளை எழுப்பிய வண்ணம் பறவைகள் பறந்து சென்றன. பங்குனி மாதமானதால் குளிர்காற்று அவளின் உடலில் பட்டு சுறு சுறுப்பூட்டியது. அழகழகாய் பூத்துக்குலுங் கிய மலர்களைப் பார்த்தாள். ஒருபுறம் ரோஜா மறுபுறம் செவ்வந்தி கொத்துக் கொத்தாக பூத்திருந்தது. மேலே மல்லி கைப் பந்தலில் இருந்து கிளம்பிய நறும ணம் மனதிற்கு மிகவும் ரம்மியமாக இருந்தது.

மாலை ஓடி ஒழித்துக் கொண்டிருந்தது. ராஜியின் மனம்கூட மலர்களைப்போல் பூத் துக்குலுங்கிய வண்ணமிருந்தது.

நேற்றைய தினம் பாடசாலையில் நடந்த தமிழ் தின விழாவை அவள் மனம் அசை போட்டது. அது அவளுக்கு இன்ப தினம். நினைக்க முகம் நாணத்தில் சிவந்தது.

அன்றைய விழாவிற்கு வேறு பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் இப்படிப் பலபேர் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ் இந்து மகளிர் கல்லூரி விழாவென்றா ல் சும்மாவா....., விழா வெகுசிறப்பாகவும், அழகாகவும் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இந்த விழாவின் தலைவி றாகினியாகிய ராஜியே..... பாடசாலையின் முதன்மைத் தலைவியும் அவளே...! வெள்ளைசாறி உடுத்தி, தலைநிறைய அழகான மல்லி கைப்பூ சூடியிருந்தாள். யாவும் றாகினியின் அழகுக்கு மேலும் அழகு சேர்த்தது.

....நடனங்கள், பாட்டுகள், நாடகங்கள்.... எனத் தொடர்ந்தன.

அடுத்ததாக பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சுந்தரலிங்கம், முன்பே நடந்து முடிந்த போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவிகளு க்கு பரிசில்கள் வழங்கினார்.

மேல் பிரிவுப் போட்டிகளில்.......... பேச்சு, கவிதை, கட்டுரை என்பவற்றில் ராஜியே முதற்பரிசைத் தட்டிச்சென்றாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக வந்தவர்களின் பேச்சுக்கள் மேடையில் ஆரம்பமாகியது. கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு என்பவற்றில் முதலாவதாக வந்தவர்கள் பேசி முடிந்ததும் இறுதியாக ராஜி பேசத் தொடங்கினாள்.

தலைப்பு பாரதி பற்றியிருந்தது. யாவரும் மெய்மறந்து அவளின் பேச்சை ரசித்தனர். நறுக்காக அவளின் வாயிலிருந்து சிந்திய வார்த்தைகள், அத்தோடு அவள் கைகளையும், தலையையும் அசைத்துப்பேசிய விதத்தில் யாவரையும் தன்பால் ஈர்த்துக் கொண்டிருந்தாள்.

பாரதி பழமையை போற்றவேண்டிய இடத்தில் போற்றி, தூற்ற வேண்டிய இடத்தில் தூற்றியவள், புதுமையையும் வரவேற்கத் தவறவில்லை. மேனாட்டில் காணப்பட்ட நற்பண்புகளை தன் மக்கள் ஏற்கவேண்டுமென விரும்பினாள். அவளின் பேச்சில் முழுமையாக தன்னை மறந்திருந்தவன்...... இந்துக் கல்லூரி மாணவத் தலைவனான சூர்யா...

சூர்யா யாவற்றிலும் சளைத்தவனல்ல. இன்றுகூட அவன் பாடசாலை சார்பில் பேச வந்திருந்தான். அதை மறந்தவனாக ராஜியைப் பார்த்த வண்ணம் இருந்தான்.

அவளின் சிவந்த மேனி, நீண்ட கூந்தல், கருவிழிகள், அழகான உதடுகள், அதன் வழியே கொட்டுகின்ற அடுக்கடுக்கான வார்த்தைகள், அழகாக செதுக்கிய சிற்பம் போன்ற உடல்வாகு யாவற்றையும் கண் வெட்டாது நோக்கிய வண்ணம் தன்னை முழுமையாக இழந்திருந்தான்.

ராஜி தொடர்ந்தாள்......, மனிதரில் ஆயிரம் ஜாதி என்ற வஞ்சக வார்த்தை ஒப்புவதற்கில்லை என்று பாடினான் பாரதி. பெண்கள் விடுதலைக்காக பாஞ்சாலிசபதம் பாடினான். "நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்" என்று புதுமைப் பெண் மூலம் சாதித்தான். பெண்களை வீட்டில் பூட்டிவைப்பதைக் கடிந்து "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்" குரலை உயர்த்தினாள்.... பெண்பாரதியாக உருவெடுத்தாள் போலிருந்தது அவளைப் பார்க்க.

கைகளை உயர்த்தியும், பதித்தும் பேசியது, அவளின் பேச்சு முதலிடம் பெறத் தகுதியுள்ளது என்று பறைசாற்றியது.

பெண்களை அடிமைகளாக நடத்தியது போதும், அவர்கள் பத்தாம் பசலிகளாக இதுவரை இருந்தது போதும். அது இது நடக்கக் கூடாது என்னும் விதத்தில் இருந்தது அவள் பேச்சு. யாவரும் கரகோசம் செய்து அவளைப் பாராட்டினர். சூர்யா தன்னை மறந்து கைதட்டிக்கொண்டிருந்தான்.

அடுத்து சூர்யாவின் முறை வந்தது. சூர்யா இப்போ "சம உரிமை" எனும் தலைப்பில் பேசுவார். ராஜி அறிவித்து விட்டு நகர்ந்தாள். யாழ் இந்துக் கல்லூரி மாணவரிடையே கூடுதலான கரகோசம் எழுந்தது.

சூர்யா எழுந்து மேடை நோக்கிச் சென்றான். அவனுக்குப் பேசுவதென்றால் சக்கரைப் பொங்கல்.... இன்று ஏனோ இதயம் அடித்துக் கொண்டது. பெண்கள் கல்லூரியல்லவா பேசவந்திருக்கிறான் அதனால் தான் என்னவோ...

யாவருக்கும் வணக்கம் கூறி பேச்சை ஆரம்பித்தான். வெள்ளை கலரில் ரவுசர், வெள்ளை சேட், கால்களில் கறுப்பு சப்பாத்து அணிந்து, மீசை அரும்பத் தொடங்கிய கட்டிளம் காளையாக மேடையில் நின்று கொண்டிருந்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பெண்களும் படிப்பில் ஆண்களுக்கு நிகர் என்று நிருபித்துக் கொண்டிருக்கிறார் கள். அவர்கள் திறமை முன்னைய காலத் தில் ஒதுக்கி மறைத்து வைக்கப்பட்டது. இப்போ அப்படியல்ல காலம் மாறிவிட்டது. அதற்கேற்ப நாமும் மாறவேண்டும். பெண் களை வெறும் அடிமைகளாக பார்க்கக் கூடாது. ஆண்களுக்கு சமம் என்று பார்க்க வேண்டும். எதில் பெண்ணானவள் குறைந் தவள்......, ஆண்களில் பலவீனமானவர்கள் இல்லையா......., இல்லை பெண்களில்தான் திறமை சாலிகள் இல்லையா.......

ஆண்களுக்குள்ள உணர்ச்சிகள் மாதிரியே பெண்களுக்கும் இருக்கின்றது. அதை அவர்கள்தான் உணரத் தவறுகிறார்கள். வாழ்க்கையில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமபங்குண்டு. இருவரும் தேவைகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

"ஏய் ராஜி உனக்கேத்தவன் இவன்தான்டி. நீ விரும்பும் அழகு..., அறிவு..., அத்தோடு கொள்கை..., பெண்களைச் சமமாக நடத்த வேண்டுமென்ற மனப்பாங்கு, மொத்தத்தில் உனக்கேத்தவன்......" பக்கத்திலிருந்த சுமி ராஜியைக் கிள்ளினாள். ராஜியின் முகம் குங்குமம் போல் சிவந்து விட்டது. வேறு யாரோடும் அவளை ஒப்பிட்டிருந்தாள் சீறி யிருப்பாள்.... ஏனோ சூர்யாவுடன் சேர்த்துப் பேசுவது பிடித்திருந்தது. பொய்க் கோபம் கொண்டு சினுங்கினாள்......

பெண்கள் எங்கே தங்களை மீறிவிடுவார் களோ என்ற பயத்தினால் தான் ஆண்கள் அவர்ளை அடக்கி வைத்திருக்கிறார்கள். இதுவரை எங்கள் காலங்களாக இருந்தது போதும், அவர்கள் காலங்களாகவும் இனி இருக்கட்டும். இறுதியாக எனக்குமுன் பேசிய ராஜி சொன்னது போல பெண்கள் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம். ஆணுக்குப் பெண் சமம் என்று கூறி பேச்சை முடித்தான். பலத்த கரகோசங்கள் பெண்களிடையே........ விழா நன்றியுரையுடன் நிறைவுற்றது.

ராஜியும் தோழிகளும் பாடசாலையை விட்டு வெளியே வந்தனர். சூர்யா தன் நண்பனுடன் இவர்கள் வரவை எதிர்பார்த் துக் காத்திருப்பவன் போல் நின்றிருந்தான். இவர்கள் அவர்களைக் கடக்க முற்படுகை யில்.........

"எக்ஸ் கியூஸ் மீ உங்களோட கொஞ்சம் கதைக்க வேணும்.... " சொல்லியபடி ராஜி யின் முன்னால் வந்தான். ராஜிக்குப் பேச்-சே வரவில்லை. இவனுடன் பேச சந்தர்ப் பம் கிடைக்காதா.... என்று மனதில் சிறிது ஏங்கியவளுக்கு, அவனே வலியப் பேச வந்த போது வாய் அடைத்து விட்டது.

"ஏய் ராஜி..." உலுக்கினாள் சுமி. "ஐ ஆம் சொறி......", ஏதோ சிந்தனையில் நிமிர்ந்து அவனை நோக்கினாள். "ஐ ஆம் சூர்யா..., கீ இஸ் காந்தன்..." அறிமுகப்படுத்தினான். ராஜியும் "இவ சுமி, அவ மேகலா, தனது நண்பிகளை அறிமுகம் செய்தாள்.

"நீங்கள் பாரதியார் பற்றிப் பேசினது மிக நன்றாக இருந்தது, எங்கள் வாழ்த்துக்கள்." இருவரும் வாழ்த்தினர் ராஜியை. "ஏன் உங்கள் பேச்சுக்கூட நன்றாயிருந்தது. மேடைப்பேச்சோடு சரியா அல்லது நடை முறையில் இப்படி நடப்பீர்களா...?" சுமியின் கேள்விக்கு "நோ... நோ... அப்படி பொய் பேசுபவன் நானில்லை....; என்ன உங்கள் தோழிகதைக்கிறாவேயில்லை. மேடையில் விளாசித் தள்ளினா....."

"...ஏன் ராஜி பேசாதிருக்கிறாய்; நீ இப்படி வாய் மூடி நான் கண்டதில்லையே...., என்ன சூர்யாவைக் கண்டதும் பேச்சு வர வில்லையா?...."

ராஜி தலை குனிந்தாள்.

"எங்கள் பாடசாலையில் ஆண்டு விழா வரு கிறது. உங்கள் பாடசாலை கூட கலந்து கொள்ளுந்தானே......, நாங்கள் பட்டிமன்றம் செய்ய இருக்கிறோம்; நீங்கள் கலந்து கொள்வீர்களா ராஜி...."
ராஜி என்று சூர்யா அழைத்ததும், அவள் முகம் நாணத்தால் சிவந்தது. தொடர்ந் தான் சூர்யா.....

".........நான் பாடசாலை மாணவ தலைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற முறையில் கேட்பதை விட நண்பன் என்ற முறையில் கேட்கின்றேன்....."

"அதற்கென்ன...., நிச்சயம் கலந்து கொள் கிறேன்;.... ஆமா...ம் தலைப்பு என்ன?..."

ஒரு கணம் மௌனமாகினான் சூர்யா.

"....இன்னும் டிசைட் பண்ணல்லை..... பிறகு அறியத்தருகிறேன். ஆமா!..... நீங்க எங்க ரியூசனுக்குப் போறனீங்க.........." என்றான் சூர்யா.

"ஏன் ரியூசனெல்லாம் கேட்கிறீங்க....., ஏதா வது விசயமா?......." குறும்பாக சிரித்தாள் சுமி.

சூர்யாவுக்கு அவள் என்ன அர்த்தத்தில் கதைக்கிறாள் என்று விளங்கியது. சிரித்த படி.... "விசயமொன்றும் இல்லை...; எங்கள் பட்டி மன்றத் தலைப்பை அங்கு தரலா மென்றுதான் கேட்டேன்..." என்றான்.

"நாங்கள் நிருவில் கிளாஸ் எடுக்கிறோம்"

"என்ன கோண்டாவில் நிருவிலா?...., நாங்க கூட அங்கு ஒரு பாடம் எடுக்கிறோம்........., ஆனா.... ஒருநாள்கூட உங்களைப் பார்த்த தில்லையே..."

"அதற்கென்ன இனி அடிக்கடி காண் போமே......" மேகலா சிரித்தாள்.

"எந்த ஆண்டு படிக்கிறீங்க........" கேட்டான் காந்தன்.

"...83 பயோ சயன்ஸ் செய்கிறோம்..."

"நாங்களும் பயோதான் இந்த வருஷம் எடுக்கிறோம்..."

".........அப்ப எங்களுக்கு சீனியர் என்று சொல்லுங்க..."

"ஆமாம்... பிறகு சந்திப்போம். பட்டி மன்றத் தலைப்பை ரியூசனில் தருகிறேன். ஓகே...... பை...பை.... " சைக்கிளில் ஏறி பறந்தனர் இருவரும்.

யாவையும் நினைத்தபடி பொழுது நல்லா இருட்டியது கூடத் தெரியாமல் அமர்ந்திருந் தாள் ராஜி.

"...அடி ராஜி எத்தனை தரம் உன்னைக் கூப்பிடுவது; காதில விழாது என்ன செய் கிறாய்..."

ராஜி திடுக்கிட்டு நினைவுகளில் இருந்து மீண்டாள்.

**அடுத்த இதழில் தொடரும்........**


## வானொலி நிகழ்ச்சிகள்

| சங்கமம் | கீதவாணி | தமிழ்ச் சோலை | நற்செய்தி |
|---|---|---|---|
| AM 1320 KHz | CIRV 88.9FM | AM 1320 KHz | AM 1540 KHz |
| புதன் மாலை 9.00-10.00 | சனி காலை 10.00-11.00 ஞாயிறு காலை 6.00-8.00 | ஞாயிறு காலை 9.00-10.00 | செவ்வாய் மாலை 10.00-10.45 |

RADIO ASIA - 530 AM அலைவரிசையில்...

9.00PM - 10.00PM

ராகப்பிரவாகம்

சங்கராபரணம்

தேமதுரம்

10.00PM - 11.00PM

குங்குமம்

திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி ஞாயிறு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Pillayar Traders

## Sri Lankan, East & West Indian Groceries & Textiles

- ★ இலங்கை, இந்திய, கனேடிய உணவுப்பொருட்கள்
- ★ உடன் ஆட்டிறைச்சி, கோழியிறைச்சி, மீன், இறால், கணவாய்
- ★ இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட காஞ்சிபுரம், காஸ்மீர் சேலைகள்
- ★ கூறைச் சேலைகள் ★ சல்வார் கமீஸ்
- ★ மணப்பெண் அலங்காரப் பொருட்கள்

என்பவற்றை குறைந்த விலையில் நிறைந்த
திருப்தியுடன் பெற்றுக் கொள்வதற்கு
ஸ்காபரோ நகரில் நீங்கள்நாடவேண்டிய
தனிப்பெரும் ஸ்தாபனம்

## பிள்ளையார் டிரேடர்ஸ்

3060 Lawrence Avenue East
(at Lawrence & Markham)
Scarborough,Ontario. M1G 1P6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI & BROTHER'S

நங்கையர் மனங் கவரும்
நவ நாகரீக ஆடைகளுக்கும்

வாலிப உள்ளங்களைக்
கொள்ளைகொள்ளும் ஜீன்ஸ்
சேட் வகைகளுக்கும்

RAJA, PYRAMID, RAMY
போன்ற CD வகைகளுக்கும்

இலங்கை, இந்திய, ஐரோப்பிய
நாடுகளுக்கு துரித பணமாற்றுச்
சேவைகளுக்கும்

சிங்கப்பூரிலிருந்து வரவழைக்கப்பட்ட
22 கரட் தங்க நகைகளுக்கும்

நீங்கள் நாடவேண்டிய இடம்

## ஸ்ரீ அன் பிறதர்ஸ்



இத்துடன் எமது ஸ்தாபனத்துக்குள்ளேயே
இயங்கிக் கொண்டிருக்கிறது

## "POWER OPTICAL"

உங்கள் மூக்குக் கண்ணாடி தேவைகளையும்
பூர்த்தி செய்கிறார்கள்

## ஸ்ரீ அன் பிறதர்ஸ்

1801 Lawrence Ave., Unit #5 (Lawrence/Pharmacy)
Scarborough, Ont.

**Tel/Fax: (416) 752-9960**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

TV La Publications Tel:(416) 425-2884 Fax:(416) 425-2462